www.tamilarangam.net

# களத்தில்

தமிழீழம் என்றோ ஒரு நாள் உதயமாவது திண்ணம். எமது மக்களாகிய நீங்கள் விடிவு பெறுவது திண்ணம்.

தமிழீழத் தேசியத்தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 சிலை 04 (18.12. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (124) அன்பளிப்பு: 60 p

# அம்பாறை அதிரடிப்படை முகாம் தரைமட்டம்! இரண்டரை மணி நேர தாக்குதலில் கைப்பற்றப்பட்டது

- ❖ 50க்கும் அதிகமான அதிரடிப்படையினர் பலி
- ❖ 85 மி.மீ 'ஆட்டிலறி , மோட்டார்கள் கைப்பற்றப்பட்டது
- ❖ பெருந்தொகையான நவீனரக இராணுவ உபகரணங்கள் அள்ளப்பட்டன
- ❖ 26 போராளிகள் வீரச்சாவு

மாவீரர் வாரத்தையொட்டி, சிறிலங்காப் படையினர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் எங்கும், விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்துக் காத்திருந்த போதிலும், அவ்விதம் எதுவும் நடக்காததையிட்டு நிம்மதி பெருமூச்சு விடும் முன்னரே, அவர்கள் எதிர்பாராத இடத்தில் – எதிர்பாராத விதத்தில் விடுதலைப் புலிகளால் முகாம் ஒன்று முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் புலுகுனாவை எனுமிடத்தில் முகாமிட்டிருந்த சிங்கள விசேட அதிரடிப் படை முகாமே இத் தாக்குதலுக்கு இலக்காகி அழிவுற்றிருக்கிறது. விடுதலைப் புலிகளின் விசேட படையணியால் மிக நுட்பமாக திட்டமிடப்பட்டு, மிக உச்ச அவதானத்துடன் அணிகள் நகர்த்தப்பட்டு திறமையாக இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடாத்தப்பட்ட இப்பகுதி எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே இருந்தது இங்கு கவனிக்கத்தக்கது.

11–12–96 அதிகாலை வேளை தொடங்கிய கடும் சண்டை, இரண்டரை மணி நேரம் நீடித்தது. கடுமையான மோட்டார், துப்பாக்கிச் சமர்களின் பின் முகாம் முற்றாக விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தது. பலியான படையினர் போக, எஞ்சியவர்கள், காயமடைந்தவர்கள் காட்டுக்குள் ஓடித் தப்பித்துக் கொண்டனர். முகாமை முழுமையாகக்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...



## வெற்றி நமதே என்றே ஆன்ம உறுதி உயரட்டும்! பாடுகளைத் தாண்டிச் செல்லும் ஆன்ம சக்தி வளரட்டும்!

கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு அருட்தந்தை எஸ் . ஜே . இம்மானுவேல்

கிறிஸ்மஸ் தினங்களில் இறைவனிடமிருந்து வரும் நற்செய்திகள் சகல ஈழத் தமிழர்களுக்கும் பொருத்தமானவை. ஆகையால் எமது அன்பு வாழ்த்துக்களையும் சிந்தனைகளையும் சகல ஈழத் தமிழ் சகோதரங்களுடன் பகிர விரும்புகின்றோம்.

கிறீஸ்துவின் பிறப்பு விழா உமது உள்ளத்திலும் இல்லத்திலும் நிறைவான நிம்மதியை உருவாக்குக!

கிறிஸ்துவின் பிறப்பு விழா ஓர் ஒளி விழா. இருளில் தவழ்ந்து தவிக்கும் மக்களுக்கு ஒளி கொடுத்து, நம்பிக்கை ஊட்டி, வழி காட்டி, உண்மை விளக்கி, விடுதலையளித்து, வெற்றி ஈட்டும் விழா.

கிறீஸ்துவின் பிறப்பு விழா ஓர் இரட்சணிய விழா. பாவத்தின் அடிமைத்தனத்திலும் அதன் விளைவான மரணத்திலும் துடிக்கும் மனிதனுக்கு அருள் பொழிந்து புது வாழ்வளிக்கும் விழா.

கிறீஸ்துவின் பிறப்பு விழா ஓர் விடுதலை விழா. சமூக –

தொடர்ச்சி 2 ம் புக்கம்...

## திருமலையில் கடற்கரும்புலித் தாக்குதல் "டோரா" படகு மூழ்கடிப்பு

**8-12-96** அன்று அதிகாலை, சிறிலங்காக் கடற்படையின் அதிவேக 'டோரா'ப் பீரங்கிப் படகு, பெண் கடற்கரும்புலி ஒருவரால் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

அதிஉயர் பாதுகாப்புக் கொண்டுள்ளதாக சிறிலங்காப் படை கூறும் திருகோண மலைத் துறைமுகப் பகுதியி லேயே இத் துணிகரத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

8ஆம் திகதி அதிகாலை. சிறிலங்காக் கடற்படையினர், புலிவீரர்கள் உள்நுழைவார்கள் எனும் பீதியில் துறைமுகப் பாதுகாப்பிற்கு தமது பீரங்கிப் படகுகளில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தவேளை, 2.40 மணியளவில், அங்கயற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கப்டன் மாலிகா, உடலில் வெடிமருந்தைக் காவியபடி, எதிரிக்கு எவ்வித சந்தேகம் ஏற்படாதவாறு சென்றார். இலக்கை அண்மித்ததும் தன்னுடன் எதிரிப் படகையும் வெடிக்க வைத்து வீரகாவியம் ஆகிவிட்டார்.

இவ் வீரசாதனையைப் படைத்த கடற்கரும்புலி கப்டன் மாலிகா (ஆறுமுகம் செல்வராணி, அல்வாய் வடக்கு, யாழ்.) அவருக்கு எமது வீரவணக்கம். ✷

## கிருசாந்தி நாற்கொலை வழக்கில் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுத் தவிர்ப்பு

### உலகை ஏமாற்றும் சந்திரிகாவின் கோமாளிக் கூத்து

கைதடியைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருசாந்தி குமாரசாமி, சிறிலங்கா இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதும் அவரைத் தேடிச் சென்ற கிருசாந்தியின் தாய் இராசம்மா குமாரசாமி, சகோதரன் பிரணவன், வழித்துணைக்குச் சென்ற அயலவர் கிருபா மூர்த்திசிதம்பரம் என்பவர்களும் இராணுவத்தால்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னிப் பகுதிக்கு உணவு விநியோகம் உலக உணவுத் திட்டம் நேரடிக் கண்காணிப்பு

## - புலம் பெயர் தமிழர்களின் முயற்சிக்கு கைமேல் பலன்

வன்னிப் பகுதிக்கு உணவு விநியோகம் சர்வதேச நியதிகளுக்கு ஏற்ப நடைபெறுகின்றதா எனக் கண்காணிப்பதற்கு உலக உணவுத் திட்டம் நேரடியாக அதிகாரி ஒருவரை அனுப்பி வைத்துள்ளது.

உணவு விநியோகம், தேவைப்படும் அளவு, விநியோக நடைமுறைகள், போக்குவரத்து முற்றைமைகள், களஞ்சியப் படுத்தல், மக்களுக்குப் பகிர்ந்து வழங்குதல் ஆகிய ஆறு விடயங்கள் அவதானிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா, வன்னிப் பகுதியில் உணவையும் மருந்தையும் ஆயுதமாக்குவது குறித்து, புலம்பெயர் தமிழர்கள் உட்பட உலகத் தமிழர்கள் பலர் உலக உணவுத் திட்டத்திற்கு பல முறைப்பாடுகள் அனுப்பியதை அடுத்தே, சிறிலங்காவிற்கான பணிப்பாளர் யோசப் சேலையிஸ், இவ் விடயங்களை நேரில் அவதானிக்கும் பொருட்டு அதிகாரி ஒருவரை அனுப்பியதுடன், உலக உணவுத் திட்டம் வவுனியாவில் புள்ளி விபர அதிகாரி ஒருவரையும் நியமித்துள்ளது. ✷

# அம்பாறை அதிரடிப்படை முகாம்...

கைப்பற்றிக் கொண்ட புலி வீரர்கள், அங்கிருந்த 85 மி.மீ 'ஆட்டிலறி', மோட்டார்கள், நவீனரக ஆயுதங்கள், ரவைகள், இராணுவ வாகனங்கள், வெடி பொருட்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் என பல பெறுமதிமிக்க ஆயுத தளபாடங்கள் அனைத்தையும் கைப்பற்றி பத்திரமாக தமது தளம் சேர்த்தனர். பாவனைக்கு ஒத்துழைக்காத வாகனங்கள் அனைத்தையும் எதிரிக்கு பயன்படாதவாறு வெடி வைத்துத் தகர்த்தனர். இதன் போது 50க்கும் மேற்பட்ட அதிரடிப் படையினர் பலியாகினர். அண்ணளவாக அதேயளவு படையினரும் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, முகாம் தாக்கப்பட்ட செய்தியறிந்து உதவிக்கென வந்த இன்னோர் அதிரடிப் படையணியும், காத்திருந்த புலிவீரர்களின் மற்றொரு அணியால் வழிமறித்துத் தாக்கப்பட்டது. இதன்போது படையினர் பயணம் செய்த 'பவள்' கவச வாகனம் சிதறடிக்கப்பட்டது.

வெற்றிகரமான இவ் முகாம் தாக்கியழிப்பின் போது, 26 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். தாயகத்தில் எதிரிப் படையை விரட்டியடிக்கும் புனிதப் போரில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அம் மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து, சிறிலங்கா வான்படையினர் கண்மூடித்தனமான குண்டு வீச்சின் மூலம் தமது இயலாத் தன்மையை காடுகளின் மீது காட்டினர்.

இத் தாக்குதல் பற்றி வழமைபோல் முரணான செய்திகளை சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியிருப்பினும் முகாம் அழிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டுள்ளது. "தாக்குதல் தொடங்கியதும் தாம் நன்கு போராடியதாகவும், எனினும் எமது சகாக்கள் பலர் இறந்துபோக, தொடர்ந்தும் அங்கிருக்க முடியாமல் வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானோம்" இவ்வாறு காயப்பட்டு மருத்துவமனையில் உள்ள ஒரு படையினன் தெரிவித்ததாக, ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. "இரண்டு மாத அமைதிநிலையை உடைத்துக் கொண்டு, விடுதலைப் புலிகள் நடாத்திய பெரும் தாக்குதல் இது"வென, பல சர்வதேச செய்தித் தாபனங்கள் இத் தாக்குதலைப் பற்றித் தெரிவித்துள்ளன.

கிழக்கில் ஏற்கெனவே, தயார் நிலையில் உள்ள புலிப்படையினர் தற்போது கைப்பற்றப்பட்ட 85 மி.மீ 'ஆட்டிலறி' மற்றும் பெருந்தொகையான மற்றைய நவீனரக ஆயுதங்களை வைத்து, வேறு பெரும் தாக்குதலை நடாத்தக்கூடும் எனும் அச்சம் சிறிலங்காப் பாதுகாப்பு உயர்பீடத்திற்கு ஏற்பட்டுள்ளமை அதன் நடவடிக்கைகளில் இருந்து தெரிகிறது. படை முகாம்களுக்கு மேலதிக படையினர், படைக்கருவிகளும் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிய வருகிறது. அத்துடன், படையினரின் நடமாட்டங்களும் குறைக்கப்பட்டுள்ளன. ✷

# வெற்றி நமதே என்றே....

பொருளாதார – அரசியல் அடிமைத்தனங்களில் சிக்கி, பகைமையிலும், தனிமையிலும், வறுமையிலும், பசிதாகத்திலும், உரிமையற்ற அகதிகளாகத் தவிப்பதிலும், துடிதுடிக்கும் உள்ளங்களுக்கு உண்மை விடுதலைப் பயணத்தையும் அதன் பாரச்சுமைகளையும் உணர்த்தும் விழா. உண்மை விடுதலை அடைய உந்துசக்தி அளிக்கும் விழா.

இன்று நானும் நீங்களும் – எம் இனத்தைச சேர்ந்த எம் நாட்டை சேர்ந்த ஒவ்வொருவரும்–விசேடமாக – இலங்கையின் வடகிழக்கில்– ஆக்கிரமிப்பு படைகளின் கீழ் அகப்பட்டு திறந்த சிறைச்சாலைகள் போல் இயங்கும் பகுதிகளில் வாழ்வோமோ மடிவோமோ என்று ஏங்கி நிற்கும் மக்களும் – ஆகாயக்குண்டு வீச்சு, பொருளாதாரத் தடை, தொடர்பு சாதன இருட்டடிப்பு போன்ற கொடூரத் தடைகளினால், பயத்திலும் பசியிலும், அரசின் பொய்பிரசார வேதனையிலும் மக்கள் தவிக்கின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் ஒளியின்றி வழிதெரியாது – நம்பிக்கையற்றவர்களாக – தனியான பொதுவான பாவத்தின் வேதனையிலும் – சமூக வேறுபாடுகள், சாதிப்பிரச்சினைகள், பொருளாதார அநீதிகள், அரசியல் அடக்குமுறைகள் – இவை அனைத்திலும் இருந்து ஓர் முழுமையான விடுதலைக்காகத் தவிக்கி ன்றோம். ஏங்கி நிற்கிறோம். இப்பேர்ப்பட்ட ஓர் சூழலில் தான் கிறீஸ்து தோன்றினார். தோன்றுகின்றார்.

எல்லா விடுதலைப் பயணங்களின் ஒளியாகவும், வழியாகவும், சக்தியாகவும், முடிவாகவும், வந்தவர் இயேசு கிறீஸ்து. வர இருப்பவரும் அவரே. இதுதான் கிறிஸ்தவர்களின் அடிப்படை விசுவாசம். எதிரியும் எதிர்க்கும் சக்திகளும் மலை போல் தான் திரண்டெழுந்தாலும் – உண்மையும் நீதியும் எமதெனில் –இறைவனே எம் பக்கமெனில் –யார் தான் எம்மை எதிர் கொள்ளமுடியும்? அச்சமெதற்கு? வெற்றி நமதே என்றே ஆன்ம உறுதி உயரட்டும்!

பாடுகளைத் தாண்டிச் செல்லும் ஆன்ம சக்தி வளரட்டும்!

இயேசு கொடுக்கும் ஒளி – உண்மை விடுதலையளிக்குமென்ற அவரின் செய்தி – அவர் கடைப்பிடித்த அகிம்சை வழி – அவர் காட்டிய பாடுகளின் பயணம் – அவரை உந்திய ஆன்ம உறுதி – இவை அனைத்தும் உமதாகுக.

அருட்தந்தை

எஸ். ஜே. இம்மானுவேல்

இலண்டன் – மார்கழி 1996.

# கிருசாந்தி நாற்கொலை வழக்கில்....

கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

யாழ். மாவட்டத்தில் படையினர் நடாத்திய இந்த நாற்கொலையின் வழக்கு கொழும்பு பிரதம நீதிபதி முனிதாச நாணயக்கார முன்னிலையில் சாதாரண சட்டங்களின் கீழ் விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக் கோவை பிரிவு 357இன்படி ஆட்கடத்தல் பிரிவு 296இன்படி கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளன. ஆனால் பாலியல் வன்முறைக்கான குற்றச்சாட்டு விலக்கப்பட்டுவிட்டது. "சிறிலங்கா அரசு, முதலாவது விசாரணை அமர்விலேயே தனது இராணுவத்தினரின் இனவெறியை ஊக்கப்படுத்தி, உலக பெண்களுக்கே அவமானமான முறையில் பாலியல் வன்முறையை ஒரு குற்றமாகக் கூட பொருட்படுத்தாது விட்டுள்ளது" என பெண்ணுரிமை இயக்க அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, படுகொலை செய்யப்பட்ட இவர்களுக்காக – நீதிகேட்டு கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்த பெண் உரிமைகள் இயக்கங்கள் மற்றும் மனித உரிமைகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை மனநோயாளிகள் என, இவ் வழக்கை விசாரிக்கும் நீதிபதி கூறியதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இதனை இந்த நீதிபதி மறுத்து, தான் அவ்வாறு கூறவில்லை எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்மூலம் சிறிலங்காவின் கொழும்புப் பத்திரிகைகள் எவ்வளவு தூரத்துக்கு உண்மைக்கு மாறான செய்திகளையும் கவனத்தைத் திசை திருப்பும் நோக்குகளையும் கொண்டு இயங்குகின்றன என்ற உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

மேலும் இவ் வழக்கில் குற்றவாளிகளாக இனங் காணப்பட்ட இரு பொலிசாரான எச். நிசாட், பி.ஏ. சமரசிங்கா ஆகியவர்களுக்கு நிபந்தனை மன்னிப்பு அளிக்கப்பட்டு அவர்கள் மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை.

ராஜபக்ஸ, ஜெயசிங்க, பிரியதர்சன, பெரேரா, அல்விஸ், முத்துபண்டா, ஜெயதிலக, இந்திரஜித் குமார, நிசாந்த ஆகிய 9 இராணுவத்தினர் மட்டுமே தற்போது சிறிலங்காவின் கண்துடைப்பு விசாரணையை எதிர்நோக்குகின்றனர். ✷

# இனம், மொழி, சமயம், நீண்ட வரலாற்றுத் தாயகம்...

நான் ஒன்றை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் மரண தண்டனையை ஆதரிப்பவனல்ல. நான் அதை எதிர்க்கிறேன். ஆனால் எனக்குத் தெரியும். கனடாவில் தூக்குத் தண்டனை இல்லையென்பது. ஏனவே இந்த மரபுகள், ஒப்பந்தங்கள் மிகவும் முக்கியமான சட்டங்களாகும்.

**கேள்வி:** இதிலிருந்து தமிழ் மக்கள் விசேட போராளிகள் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லது அவர்கள் ஒப்பந்தம் 1, விதி 4 (1) க்குப் பொருந்துபவர்களாக அமைகிறார்கள் என்பதை விளக்குமாறு உங்களைக் கேட்கப்போகிறேன். ஆதற்கு முன் பேராசிரியர் Quigley அவர்களது சாட்சியத்தின் போது எழுந்த சில பிரச்சினைகள் பற்றி உங்களது கருத்தை அறிய விரும்புகிறேன். சிறுபான்மை மக்கள் என்பதற்கு பதிலாக மக்கள் என்ற பதத்தை வரைவிலக்கணம் செய்ய ஏதாவது வழி இருக்கிறதா?

**பதில்:** ஆம், நீதிபதியும் இந்தக் கேள்வியை கேட்டிருப்பது எனக்குத் தெரியும். சர்வதேச சட்டத்தின் கீழ் சிறுபான்மை மக்களை "மக்கள்" என்று கணிக்க முடியாது. ஆனால் அப்படியான மக்கள் இனம், மொழி, சமயம், வரலாற்று முக்கியம் வாய்ந்த தாயகம் இவற்றைக் கொண்டிருப்பதும் உண்டு. உதாரணத்துக்கு நீதிபதி அவர்கள் அநுமானமாக (hypothetical) ஒரு கேள்வியைக் கேட்டார்.... நான் சிகாகோவின் தென்பகுதியில் பிறந்து வளர்ந்தவன். அங்கு ஐரிஷ் மக்கள் கடந்த 100 வருடங்களாக வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் சிகாகோவின் தென்பகுதி அவர்களது வரலாற்றுத் தாயகம் அல்ல. ஆன காரணத்தினால் அவர்கள் தங்களுக்கு சர்வதேச சட்டப் பிரகாரம் சுயநிர்ணய உரிமை இருக்கிறதாகவும், தென் சிகாகோ ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பிரிந்துபோக உரிமை இருக்கிறதாகவும் கோரக்கூடும்.

நான் நினைக்கிறேன் இதற்குரிய விடை அமெரிக்காவில் இலத்தீன் மக்கள் சம்பந்தமாக நீதிபதி அவர்கள் கேட்ட கேள்விக்கும் விடை அளிப்பதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

தொடரும். . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இராணுவ விலகலின் முக்கியத்துவம்

சிறிலங்கா அரசின் ஆட்சியில் இலங்கைத் தீவை வரலாற்றுப் பூர்வமான தாயகமாகக் கொண்டு வாழும் தமிழ் மக்கள் எப்படி நடாத்தப்படுகின்றனர்?

சர்வதேச நிறுவனங்களான ரொய்ட்டர் செய்தி நிறுவனம், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம் (யு.என்.எச்.சி.ஆர்), செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை திரட்டிய உத்தியோகபூர்வமான புள்ளிவிபரத் தகவல்கள் என்ன கூறுகின்றன?

"50,000க்கும் மேற்பட்ட மக்கள் கொன்றழிக்கப்பட்டு 85,000க்கும் அதிகமான மக்கள் உள்ளக இடப்பெயர்வுக்கு ஆளாக்கப்பட்டு, 300,000க்கும் அதிகமான மக்கள் சர்வதேச நாடுகளில் அகதிகளாக அரசியல் தஞ்சம் கோரி வாழ்கின்றனர்"

இத்தனைக்கும் முழுமுதல் மூலகாரணமாகத் திகழ்வது சிறிலங்காவின் அரச பயங்கரவாதமே. அத்துடன் மேற்கூறப்பட்ட புள்ளி விபரங்கள் சிறிலங்காவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகக் குறைந்தபட்ச புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. உண்மையில் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, புனர்வாழ்வு-புனர்நிர்மாண நிறுவனங்களின் புள்ளிவிபரங்களின்படி இத் தொகைகள் பலமடங்கு அதிகம்.

அத்துடன் காணாமல் போனவர்களின் வழக்குப் பதிவில் உலகில் இரண்டாவது ஸ்தானத்தைப் பிடித்து சிறிலங்கா முன்னேறி வருகிறது என்ற உண்மையை ஐரோப்பிய மனித உரிமைச் சட்டச் சஞ்சிகை அம்பலமாக்கியுள்ளது.

மேலும், இறுதியாக நடைபெற்ற கிளிநொச்சி ஆக்கிரமிப்பில் சிறிலங்கா 850 தொன் வெடிமருந்துகளைக் கொட்டி, 1000 சதுர மீற்றர் பரப்புள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் 60 சதுர மீற்றர் பரப்பை மட்டுமே ஆக்கிரமித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் விளக்கியுள்ளன. அது மட்டுமல்ல தமிழீழ மண்ணில் இதுவரை எந்த ஒரு பிரதேசமுமே சிறிலங்காவின் பூரண கட்டுப்பாட்டில் இல்லை எனவும், யாழ். குடாநாட்டில் கூட பல மைல்களுக்கு மண் மூட்டை அரண் கட்டி அதற்குப் பின்னால் ஒளிந்த நிலையில் சிறிலங்கா இராணுவம் தவிப்பதையும், பெரும்பாலான பரப்பில் விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளை சுமூகமாக மேற்கொள்வதையும் பத்திரிகைகள் தெளிவுபடுத்தியுள்ளன. அப்படியானால், சிறிலங்கா எதற்காக இந்தப் போரைத் தொடர்கிறது? இதற்கான ஒரே பதில் தமிழ் மக்களின் அபிவிருத்தியை அழித்தல் என்பதேயாகும்.

ஐக்கிய நாடுகள் சாசனச் சட்டங்களின்படி, "மக்களின் அபிவிருத்தியை அழித்தல்" என்பது சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் எதிரான செயற்பாடாகும். சிறிலங்கா அரசின் நோக்கு தமிழ் மக்களின் மூல வளங்களை இயற்கை அரண்களை இல்லாதொழிப்பதேயாகும். சிறிலங்காப் பாராளுமன்றத்தின் சமீபத்திய தகவலின்படி, வடக்கு-கிழக்கில் 175,000 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. 50 மில்லியன் ரூபாக்களைக் கடந்த ஆண்டு வடக்கு கிழக்குக்கென ஒதுக்கீடு செய்ததாக கூறிக் கொள்ளும் சிறிலங்கா, 25 மில்லியன் கூட வழங்கவில்லை என்றும் மேலும் புனர்வாழ்வுக்கு எனப் பெறப்பட்ட வெளிநாட்டு உதவிகள் அதற்கு பயன்படுத்தப்படவில்லை எனவும் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினரே உறுதி செய்துள்ளார். அதேவேளை, சிறிலங்கா தமிழர் தாயகத்தின் ஆக்கிரமிப்புப் போருக்கு 7000 கோடி ரூபாக்களை ஒதுக்கீடு செய்ததை விட அதிகமாகத் தாராளமாகச் செலவிட்டுள்ளது.

இவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் சிறிலங்கா அரசு, இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் அந்நிய அரசாக ஆட்சி செய்கின்றது என்பதை உணர்ந்து கொள்வர். இந்த அந்நிய அரசு மேற்கொள்ளும் ஒடுக்குமுறைகள், இராணுவ அட்டூழியங்களுக்கு எதிராக - ஐ.நா.வின் சட்டங்களுக்கு அமைய தமிழீழ மக்கள் நடாத்தும் தேசிய விடுதலைப் போராட்டமே - தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம்.

இந்த உண்மை உலகால் உணரப்பட்டு வருவதை திசை திருப்பும் நோக்கில் தமிழ் மக்களின் குடிசார் நிர்வாகத்தை ஏற்படுத்த விரும்புவதாக சிறிலங்கா போடும் நாடகமே வட மாகாணத்துக்கான "உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு". இதன் மூலம் சிறிலங்காவின் ஆட்சியே வேண்டாமென்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்த மக்களை, இராணுவ அழுத்தத்தின் மூலம் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இது ஜனநாயகத்திற்கே எதிரான செயல். அத்துடன் யாழ். குடாநாட்டில் எத்தகைய நிலையில் மக்கள் வாழ்கின்றனர் என்பதற்கு கிருசாந்தியும் அவரின் குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்ட வெறித்தனம் உதாரணமாகின்றது. இக் கொலைகளில் இனங்காணப்பட்ட இராணுவத்தினர் மேல் பாலியல் வன்முறைக் குற்றத்தை சுமத்தாது விட்டதன் மூலம் சிறிலங்கா எத்தகைய கண்துடைப்பு விசாரணைகளை நடாத்தி, தனது இராணுவத்தினரின் சட்ட விரோத நடவடிக்கைகளை பாதுகாக்க முயல்கிறது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்நிலையில், சிறிலங்கா அந்நிய அரசாக தமிழ் மக்கள் மீது மனித நேயத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்ய சட்டகமாக உள்ளது இவ் இராணுவ ஆக்கிரமிப்பே. அதனால்தான் தேசியத் தலைவர் பிரபாகரன் "இராணுவ விலகலுக்கு" முக்கியத்துவம் கொடுத்துத் தனது இவ்வாண்டு தேசிய மாவீரர் நாள் உரையை நிகழ்த்தினார்.

தமிழ்ப் பகுதிகளில் அமைதி, ஜனநாயகம், நீதி, பாதுகாப்பு ஏற்பட்டு மக்கள் தமது வழமைக்குத் திரும்புவதற்குத் தேவையாக இருப்பது உள்ளூராட்சித் தேர்தல் அல்ல - இராணுவ விலகலே. இதனை உடன் செய்யுமாறு சிறிலங்காவை வற்புறுத்த வேண்டிய பொறுப்பு, உலகத் தமிழர்களின் கடமை. உலகத் தமிழர்களின் முயற்சியின் பயனாக, சிறிலங்கா உணவை ஆயுதமாகப் பயன்படுத்துவதை இனங்கண்டுள்ள உலக உணவு நிறுவனம், சர்வதேச நியதிகளுக்கு ஏற்ப அங்கு உணவு அனுப்பப்படுகிறதா என்பதை ஆராய நேரடித் தலையீட்டை ஆரம்பித்துள்ளது. இதனை வரவேற்கும் புலம் பெயர் தமிழர்கள், இதேபோன்று ஏனைய விடயங்களிலும் உடன்நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை வேண்டி நிற்கின்றனர். ✷

## யாருக்காக சந்திரிகா போரை நடாத்துகிறார்?

"உலக வரலாற்றில் ஆயுதங்களைக் கொண்டு வெல்லப்பட்ட போர் எதுவும் இல்லை" என்ற சந்திரிகா அம்மையாரின் உபதேசம் யாருக்கு? சிங்கள மக்களுக்கா - அன்றி சிங்களச் சிப்பாய்களுக்கா - அன்றி எதிர்க் கட்சியினருக்கா? ஏனெனில் போரை நடாத்திக் கொண்டிருக்கும் அரசே ஆயுதங்களைக் கொண்டு வெல்லப்படும் போர் எதுவும் இல்லை என்று கூறும்போது போரை யார் நடத்துவது என்ற கேள்வி எழும்புவது நியாயமானதே.

அண்மையில் உயிரிழந்த விமானப் படையினருக்கும், அங்கவீனர்களுக்கும் கௌரவம் அளிக்கும் வகையில் விமானப் படையினர் ஏற்பாடு செய்த வைபவத்தில் மேற்கூறப்பட்ட கண்டுபிடிப்பை வெளியிட்ட சந்திரிகா, மேலும் "சமூகங்களில் மத்தியில் சகோதரத்துவத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். இதற்கு அர்ப்பணிப்பு அவசியம். இல்லாவிட்டால் ஒரு போரில் வெற்றி பெறும்போது மேலும் பல போர்கள் 'காளான்கள்' போன்று தோன்றிக் கொண்டு இருக்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் போரின் மூலம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது என்பது சந்திரிகா அம்மையார் கூறித்தான் இலங்கையர்கள் இன்று புரிந்து கொள்ள வேண்டும் என்பதல்ல. ஏனெனில் கடந்த 13 ஆண்டுகளுக்கு மேலாக, சிறிலங்கா ஆட்சியாளர்கள் போரை முடிவுக்குக் கொண்டு வர எடுத்த பெரும் பொருள் மற்றும் உயிர்ச் சேதங்களுடன் கூடிய எந்தவித முயற்சியும் இதுவரை வெற்றியை அளித்ததாக இல்லை என்பதில் இருந்தே, இவ் விடயம் அவர்களுக்கு புரிந்திருக்க முடியும். இதே சமயம் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் சிங்கள மக்களும் நிரம்பவே விருப்பம் கொண்டுள்ளனர். "போரை முடிவுக்குக் கொண்டு வருவேன்" எனத் தேர்தலின் போது சந்திரிகா அளித்த வாக்குறுதியை நம்பி மக்கள் வாக்களித்தனர். இந்த நிலையில், சமாதானத்தின் தேவையை சந்திரிகா அம் மக்களுக்குக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

இது மாத்திரமல்ல, இராணுவத்தில் சேர்வதற்குச் சிங்கள இளைஞர்கள் முன்வராமல் இருப்பதில் இருந்தே அவர்கள் போரில் அக்கறை காட்டவில்லை என்பதையும், போரை விரும்பவில்லை என்பதையும் அரசு புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால், அரசு அதைப் புரிந்ததோ அன்றிப் புரியவில்லையோ, மக்களின் விருப்பத்திற்கு மாறாக, இளைஞரை இராணுவத்தில் இணைத்துப் போர்க் களத்திற்கு அனுப்புவதில் அக்கறை காட்டி வருகின்றது. ஆனபடியால் - போரை ஆயுதங்கள் வெல்ல முடியாது என்று வேறு யாருக்கு சந்திரிகா கூறுகின்றார். சிறிலங்காவின் ஆயுதப் படையினருக்கா? ஆனால் ஆயுதப் படையினரோ அரசின் பெயரிலேயே செயல்படுகின்றனர். அரசு நிறுத்தச் சொன்னபோது போரை நிறுத்தியுள்ளனர். போரை ஆரம்பிக்கச் சொன்னபோது ஆரம்பித்துள்ளனர்.

ஆகையினால் படையினர் போரில் நாட்டம் கொண்டிருப்பது கூட, அரசின் பணிப்பையிட்டே செயல்படுகின்றனர். ஆகையினால், சந்திரிகா அம்மையார் போரின் மூலம் வெற்றி பெற முடியாது என யாரை எச்சரிக்கிறார்? போரைத் தானே நடாத்திக் கொண்டு, "போரில் வெற்றி காணமுடியாது, பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது" என எச்சரிக்கை விடுவது ஏன்? சந்திரிகா குழம்பிப் போய் உள்ளாரா? அன்றி சந்திரிகாவின் பேச்சுக்களே இவ்வாறனது தானா? இதற்கு சரியான பதில் - ஜனாதிபதி சந்திரிகாவின் கொள்கையே இதுதான் என்பதாகும். அதாவது, சந்திரிகா சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு போரை நடாத்தவே விரும்புகின்றார். ஏனெனில், போரே அவர் தனது ஆட்சியில் நிலைத்து நிற்கக் கூடிய சந்தர்ப்பத்தை இன்று அவருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. போர் நின்றுவிடுமானால் அரசு தனது ஆட்சியை நடாத்த முடியாத நிலை உருவாகிவிடும். ஏனெனில் தென்னிலங்கையில் இன்று அரசுக்கு எதிரான நெருக்கடிகள் அந்தளவிற்கு தீவிரமாகியுள்ளன. ✷

## "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் ....

சந்தேகத்தின் பேரில் இராணுவம் கைது செய்துள்ளது.

டென்மார்க்கிலிருந்து சிறிலங்காவிற்கு நாடு கடத்தப்பட்ட சித்திரா இராசேந்திரனை தெகிவளை பொலிசார், விடுதலைப்புலி என்ற குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர்.

இவரது கைது விபரம் பற்றி அறிய, சிறிலங்காவிற்கு வந்த நான்கு டென்மார்க் பத்திரிகை, தொலைக் காட்சி நிருபர்கள், படப்பிடிப்பாளர்களைப் பிடித்துத் தடுத்து வைத்த பொலிஸ் இப்போது அவர்களை நாடு கடத்தியுள்ளது.

கொழும்புக்கு வரும் தமிழர்கள் மூன்று நாட்களுக்கு மட்டுமே விடுதிகளில் தங்கலாம். அதற்கு மேல் தங்குவதற்குப் பொலிஸ் தடை விதித்துள்ளது.

மலையகம் உட்பட கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், சிங்கள இராணுவத்தின் வதை முகாம்களிலும், சிறைக்கூடங்களிலும் நீதி விசாரணையின்றி ஆண்டுக்கணக்காகச் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களைக் கைது செய்யவும், கைதுசெய்தபின் கொலை செய்யவும் சிறிலங்கா அரசு சிங்கள இராணுவத்திற்கு வெளிப்படையான அனுமதியை (Open Licence) வழங்கியுள்ளது.

"விடுதலைப் புலிகள் பௌத்த வழிபாட்டுத் தலங்களைத் தாக்கினால், நானே நேரடியாகத் தமிழ் மக்களைத் தாக்குவதற்குக் களத்தில் இறங்குவேன்" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்று (கொழும்பு, 'சண்டை லீடர்' ஆங்கிலப் பத்திரிகையின் கூற்றுப்படி) இந்த உண்மையை மெய்ப்பிக்கின்றது.

எனவே, தமிழீழ மண்ணை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தை, அந்த மண்ணிலிருந்து விரட்டினால் மட்டுமே, தமிழ் ஈழத்தில் நாளும் பொழுதும் நடைபெறும் கொலை, பாலியல் துன்புறுத்தல், சிறை, சித்திரவதை போன்றவற்றைத் தடுத்துநிறுத்த முடியும்.

"வீட்டுக்கு வேலி போட்ட நாங்கள், நாட்டுக்கு எல்லை போடத் தவறிவிட்டோம். அரை அங்குலம் கதியால் தள்ளினால் அயலானை வெட்ட கத்தியைத்தூக்கிய நாங்கள், ஆயிரக்கணக்கான சதுரமைல் நிலப்பரப்பை மாற்றான் பிடித்தபோது நித்திரை கொண்டுவிட்டோம்."

சனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குமுன் அழித்து விடப்போவதாகவும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரப்போவதாகவும் சூளுரைத்துள்ளார். மாடு நிகர் துச்சாதனன் அநுருத்த ரத்வத்த, விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில், 80 விழுக்காடு வென்று விட்டதாகவும், மிகுதி 20 விழுக்காட்டை வெகுவிரைவில் வென்றெடுக்கப் போவதாகவும் ஆர்ப்பரித்துள்ளார்.

இப்படிச் சூளுரைத்தவர்களும், ஆர்ப்பரித்தவர்களும் முன்னரும் இருந்தாலும், சனாதிபதி சந்திரிகா, அநுருத்த ரத்வத்தவின் காலக் கெடுக்களை நாங்கள் அலட்சியப் படுத்த முடியாது.

சனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளை அழித்துவிட இரண்டு

தொடர்ச்சி 10 ம் பக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தகுதியற்றோரால் உருவான சீரழிவு!

பொருத்தப்பாடற்றவரும், அனுபவமற்றவருமான ஒரு ஜனாதிபதியைக் கொண்டுள்ள சிறிலங்கா முற்றாகவே குழப்பமுறும் நிலையை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றது" என்ற எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் குற்றச்சாட்டுக்கள் இன்றைய நிலைக்கு மிகவும் பொருத்தப்பாடானதே ஆகும்.

சந்திரிகா குமாரதுங்கா அரசானது இராணுவ வெற்றி களைப் பற்றி என்ன தான் பேசிக்கொண்டாலும் சிறிலங்கா பெரும் நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருப்பது வெளிப்படையானதொன்று. அதாவது, மீள முடியாத பெரும் பொருளாதார நெருக்கடி ஒரு புறம் - தீர்வு காண முடியாத கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் இன மோதல் மறுபுறம் என எதிர் காலம் குறித்த நம்பிக்கை எவையும் சிறிலங்காவின் அரசியலில் தென்படுவதாக இல்லை.

> தனியார் மயமாக்கல் என்றால், அரசின் சொத்துடைமைகளை விற்றுப் பணம் சேர்த்தல் என்றும் போர்ச் செலவீட்டை அதிகரிப்பதன் மூலம் போரில் வெற்றி பெற முடியும் என இயங்கும் சந்திரிகா அம்மையார் வரலாறுகளைப் பாடமாகக் கொள்ளாது, சம்பவங்களாக நோக்கும் ஆழமான அறிவுத் திறன் - அனுபவத் தன்மை அற்றவராகவே காணப்படுகிறார்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுவது போன்று "ஐக்கிய தேசியக்கட்சி தனது 17 வருட ஆட்சிக்காலத்தில் உருவாக்கிய பொருளாதாரக் கட்டமைப்பை, சீர்குலைத்தும் கெடுத்தும் உள்ளது. அரசின் வரவு செலவுத் திட்டமும், அரசின் செயற்பாடுகளும் கட்டுமீறிச் செல்வதாக உள்ளன" என்ற சந்திரிகா அரசின் மீதான குற்றச்சாட்டு, ஏதோ எதிர்க் கட்சித் தலைவரின் வழமையான பாணியிலான ஒன்று என நிராகரித்து விடுவதற்கில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது, வடக்குக் கிழக்கில் போர் இடம் பெற்றதாயினும், சிற-லங்காவின் பொருளாதாரமானது - தென்னாசியாவிலேயே உயர்ந்த வளர்ச்சிப் போக்கைக் கொண்டிருந்தமை ஏதோ உண்மை தான் - இது அதிசயப்படத்தக்க தொன்றாகவும் கூட இருந்தது. ஆனால், இவ்வாறான நிலைமை இருந்தமைக்கு திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் பொருளாதாரக் கட்டமைப்பு ஓரளவு திறம்பட மேற்கொள்ளப்பட்டமையே காரணமாக இருந்தது.

இதே சமயம் போரை ஐ. தே. கட்சியும் நடத்திக் கொண்டிருந்ததாயினும், போரிற்கான செலவீடு கட்டுக் கடங்காது செல்வதையும் அது ஓரளவு தடுக்கவே முயற்சித்தது. ஏனெனில், போர்ச் செலவீட்டை அதி-கரிப்பதன் மூலம் போரில் வெற்றிபெற முடியாது என்பதை அது அனுபவ ரீதியாகவே உணர்ந்திருந்தது.

ஆனால், சந்திரிகா குமாரதுங்க அரசோ போர்ச் செலவீனம் பற்றிக் கவலைப்படவில்லை. போர்ச் செலவீட்டை அதிகரிப்பதன் மூலம் போரில் வெற்றி பெற முடியும் என்ற ரீதியிலேயே செயற்பட்டது. இதற்கு குமாரதுங்காவின் அனுபவமற்ற தன்மை கூடக் காரணமாக இருக்கலாம். இல்லாதவிடத்து வரலாறு களைப் பாடமாகக் கொள்ளாது, சம்பவங்களாக நோக்கும் ஆழமான அறிவுத்திறன் அற்றிருக்கலாம்.

இதில், எதுவாக இருப்பினும், சந்திரிகா குமாரதுங்காவின் இரண்ட வருடகால ஆட்சிக்குள்ளேயே சிறிலங்காவின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சிறந்த பொருளாதாரக் கொள்கையின் கட்டமைப்புச் சிதைந்து போய் விட்டது என்றே கூறலாம். சுருக்க மாகக் கூறுவதானால், திறந்த பொருளாதாரக் கொள்கை வெற்றிகரமாகச் செயற்படுவதற்கான வெளிநாட்டு மூல தனத்தின் வருகை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பங்குச்சந்தையும், தொடர்ந்து தளம்பல் நிலையிலேயே இருப்பதும், உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சி கண்டுள் ளமையும் காரணமாகும்.

இதனை, சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சி வீதமானது வீழ்ச்சி கண்டதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். அதாவது, இன்று தென்னாசியாவில் பொரு ளாதாரம் மிகக் குறைந்த வளர்ச்சி வீதமுடைய நாடு என்ற கட்டத்தையும் சிறிலங்கா அடைந்துள்ளதோடு, தென்னாசியாவில் அதி உயர் பண வீக்கம் உள்ள நாடு என்ற கட்டத்தையும் சிறிலங்கா அடைந்துள்ளது.

இதே சமயம் தனியர் மயமாக்கல் என்ற அரசின் நிலைப்பாடு, அரசின் சொத்துடைமைகளை விற்றுப் பணம் சேர்த்தல் என்பதாகவே உள்ளது. இவ்விடயத்தில் 'சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான நிகால் கலப்பதி கூறியிருப்பது போன்று, அரச சொத்துக்களை விற்றுச் சந்திரிகா அரசு ஏப்பமிட்டு விட்டது என்பதே சரியான கூற்றாகும்.

இவ்வாறாகப் பொருளாதாரத்தைச் சிதைத்துவிட்ட சந்திரிகா அரசு, இவை யாவற்றிற்கும் 'போரில் வெற்றி' என்பதையே தனது தாரக மந்திரமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம், இந் நெருக்கடிகளை மறைத்து விடலாம் எனவும் கருதுகின்றது. ஆனால், போரில் வெல்ல முடியாது என்பதை சந்திரிகா அரசு விளங்கிக் கொண்டுள்ளதோ - இல்லையோ உலகம் புரிந்து கொண்டுள்ளது என்பது வெளிப்படையானது. ●

# தவறு என்ன?

சிறிலங்கா ஆயுதப்படை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அந்நியப் படை போல் செயற்பட்டு வருகின்றது" என்ற ஐநா. செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் அறிக்கையானது சிறிலங்கா அரசிற்குப் பெரும் ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. ஒருவகையில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் கூறலாம். இதனைத் தொடர்ந்தே சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஐ. நா. செயலாளரை நேரில் சந்தித்து தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

ஆனால், தாம் கூறும் பொய்களையும், புனை கதைகளையும், யதார்த்தத்திற்கு மாறான கூற்றுக்களையுமம் உலகம் ஏற்கவேண்டும் என சிற-லங்கா அரசு எதிர்பார்ப்பது தவறானதாகும். உலகம் இருண்டுபோய்க் கிடக்கவில்லை, சிறிலங்கா அரசு கூறுவதை ஏற்றுக்கொள்வதற்கு. சிறிலங்கா அரசு கூறும் பொய்களைச் சில அரசுகள் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், அதற்காக அவை உண்மையாகிவிட முடியாது. அவை அவ் அரசுகளின் அரசியல் இராணுவ அனுகூலங்கள் சார்ந்த முடிவுகளே ஆகும்.

இதைவிடுத்து, சிறிலங்காவின் ஆயுதப்படையினர் அந்நியப் படைபோல் செயற்படுகின்றன எனக்கூறியதில் தவறு என்ன இருக்கின்றது? சிறிலங்கா இராணுவம் "விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை" என்ற பெயரில் மேற்கொள்ளும் பாரிய படை எடுப்புக்கள், சுற்றிவளைப்புச் சோதனைகள் உட்பட சகல நடவடிக்கைகளுமே அந்நியப் படைகளின் செயற்பாட்டிற்கு ஒத்தவையாகவே உள்ளன. இதில், கேள்விக்கோ அன்றிச் சந்தேகத்திற்கோ என்ன இருக்கிறது?

புலிகளுக்கு எதிரானது என்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் படை எடுப்புக்கள் யாவும் ஒரு அந்நிய நாட்டுப்படை எடுப்பிற்கு ஒத்தவையாகவே இருக்கின்றது. அதாவது, பல்லாயிரக்கணக்கான துருப்புக்கள், விமானப்படை, கடற்படை என்பனவற்றின் முழுமையான ஒத்துழைப்புடன் டாங்கிகள், ஆட்லறி, பீரங்கி சகிதம் இப் படை நகர்ச்சிகள் இடம் பெறுகின்றன. இவற்றின்போது பயன்படுத்தப்படும் பீரங்கி மற்றும் ஆட்லறி எறிகணைக-ளின் அளவுகள் பல்லாயிரக்கணக்கானவை, விமானப்படை பயன்படுத்தும் வெடிப்பொருட்களோ பல ஆயிரம் கிலோக்கணக்கானவை. இத்தகைய போர் நடவடிக்கை ஒன்றை உள்நாட்டுப் போர் என்று கூறமுடியுமா?

> புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்று கூறிக்கொண்டு, பொது மக்களுக்கு பெரும் உயிர்ச் சேதத்தை விளைவிக்கும் வகையில், நவீன குண்டு வீச்சு போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், மற்றும் ஆட்டிலறி பீரங்கிகள், டாங்கிகள் இவைகளுடன் பல்லாயிரம் துருப்புக்களுடன் படையெடுப்பை நடாத்தும் சிறிலங்காப் படைகளை அந்நியப் படை எனக் கூறாமல் வேறு எப்படி அழைப்பது?

இவைகள்தான் ஒருபுறம் இருக்க, மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளும் மக்களின் உயிரையோ அன்றி உடைமைகளையோ பொருட்படுத்தி மேற்கொள்ளப்படுபவையாக இல்லை. ஒவ்வொரு பெரும் இராணுவ நடவடிக்கையின் போதும் பெருமளவு மக்கள் உயிரிழப்பதோடு, அங்கவீனர்கள் ஆகின்றனர். இலட்சக்கணக்கானோர் தமது வீடுவாசல்களை இழந்து இடம்பெயர்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் ஓர் இராணுவத்தை அந்நிய இராணுவம் போன்றுள்ளது எனக் கூறாது வேறு எவ்வாறு கூறுவது?

இவற்றிற்கு அடுத்ததாக, ஒரு பிரதேசத்தை ஆக்கிரமித்த பின்னரவது அங்கு நிலைநிறுத்தப்படும் ஆட்சி எத்தகையதாகவுள்ளது? சிறிலங்கா அரசு என்னதான் கூறிக்கொண்டாலும் அங்கு 'குடிசார் நிர்வாகம் எதுவும் இடம்பெறுவதாக இல்லை. ஒரு இருண்ட உலகில் இராணுவ ஆட்சியையே அரசு நிலைநிறுத்த முனைகின்றது. இதற்கு, இன்று யாழ் குடாநாடு சிறப்பான உதாரணமாகும்.

மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாது - வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகள் - எவரும் எவ்வேளையிலும், பால் வேறுபாடோ அன்றி வயது வேறுபாடோ இன்றிக் கைதுசெய்யப்படலாம்; சித்திரவதை செய்யப்படலாம்; படுகொலையும் செய்யப்படலாம்; காணாமற்கூடப் போகலாம். இராணுவம் இரவு வேளைகளில் வீட்டுக் கதவுகளை தட்டலாம் அல்லது உடைக்கலாம். அங்குள்ள பெண்களை பாலியல் வன்முறைக்கும் உட்படுத்தலாம்.

இவ்வாறானதொரு நிலையை ஓர் அந்நியநாட்டு இராணுவத்தைத் தவிர வேறு ஓர் இராணுவத்தால் உருவாக்க முடியுமா? சிறிலங்கா அரசு 'பாதுகாப்புப் படைகள்' என்று கூறுகின்றது என்பதற்காகப் படுகொலை புரியும் படைகள், பாதுகாப்புப் படைகள் ஆகிவிடுமா? சிறிலங்கா அரசு 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' எனக் கூறுவதினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் சுதந்திர பூமி ஆகிவிடுமா? அல்லது சிறிலங்கா அரசு கூறுகின்றது என்பதற்காக, உலகம் அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் தான் உண்டா? இதற்காக சிறிலங்கா ஆத்திரப்படுவதில் அர்த்தம் என்ன உண்டு? ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜேர்மனியில் இறுதி மூச்சு வரை

# தமிழீழ உணர்வை விதைத்து வளர்த்த முன்னோடி மேஜர் சுரேந்தி



**மேஜர். சுரேந்தி**
(நமசிவாயம் சுரேந்திரகுமார்)
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்
மண்ணில்: 07.08.1956
மண்ணுக்காக: 18.10.1991

தமிழீழ மண் மீட்புக்கான முனைப்புகளில் மரணத்தைத் தழுவிக் கொண்ட விடுதலைப்புலிகள் வரலாற்றில் மேஜர் சுரேந்திரகுமாரும் நிலைத்து நிற்கின்றார். தமிழீழத் தேசியத் தலைவரால் மேஜர் விருது பெற்று இவருடைய கடந்தகாலத் தியாகங்களும் இடைவிடாத செயற்பாடும் நினைவு கூரப்படுகின்றன.

சுரேந்தி என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட இந்த மாவீரர், நித்திலா என்ற புனைபெயரிற்குள் மறைந்து கொண்டு, வரைந்த விடுதலைக் கவிதைகள் இன்றும் புதிய இளைய சந்ததியை உணர்வூட்டி வழிநடத்திக் கொண்டிருக்கிறது. 1956ம் ஆண்டு ஆவணிமாதம் 7ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஈச்சமோட்டை எனும் கிராமத்தில் நமசிவாயம், விஜயலட்சுமி தம்பதியினருக்கு இளைய மகனாக இவர் பிறந்தார்.

இவர் சுண்டுக்குழியில் உள்ள பரியோவான் கல்லூரியில் கல்வி பயின்றார். கலை பண்பாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருந்த இவர், இளமைக் காலத்திலேயே கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதுவதிலும் தொழில் நுட்பத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இலங்கை வானொலியின், இசையும் கதையும் எனும் நிகழ்ச்சியில் இவரது படைப்புக்கள் ஒலிபரப்பப்பட்டதுண்டு.

அரசியல் அறிவுற்ற நாட்தொடக்கம் இவர் சிவகுமாரனின் விடுதலைக் கொள்கையை ஆதரித்துச் செயற்பட்டார். பெற்றோரினதும், உற்றாரினதும் நிர்ப்பந்தத்தின் பேரில் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் தமிழீழத்தில் இருந்து வெளியேறி யேர்மனி வந்தபோதும், அரசியல் ரீதியான சிங்கள இனவாத அரசின் ஒடுக்கு முறைகளை எதிர்க்கும் பாங்குடன் செயற்பட்டார். தமிழீழமக்கள் யேர்மனியின் பலபாகங்களிலும் பிரிந்து ஒதுங்கி எதிர்காலச் சிந்தனையின்றி வாழ்வது கண்டு வேதனைப் பட்டார். தமிழ் மக்களின் ஒன்றிணைந்த சேவையை அன்றைய தேவையாகக் கருதினார்.

யேர்மனியில் தான் வசித்து வந்த கொமர்ஷ்பாக் நகரத்தில் தனது பணியை ஆரம்பித்துச் செயற்பட்டார். 1983ல் தமிழீழ விடுதலைப்புலிகள் யேர்மனிக்கி ளையின் நகரப் பிரதிநிதியாக இவர் நியமிக்கப்பட்டார். சுயநலமற்ற சுறுசுறுப்பான இவரது செயற்பாடு, மிக விரைவிலேயே இவரை மாநிலப் பொறுப்பாளர் ஆக்கியது. தன்னை முன்னிலைப் படுத்தாத சிநேகபூர்வமான, சுயநலமற்ற இவருடைய தீவிர செயற்பாடு அந்த மாநிலத்தில் புலிகள் மீதான அன்பு பெருக்கெடுக்க வழிவகுத்தது. சுரேந் தியின் சரியான கொள்கை விளக்க மும் நட்பான அணுகு முறையும் அந்தக் காலகட்டத்தில் இயங்கிய பல்வேறுபட்ட குழுக்களிடம் இருந்து புலிகளின் அமைப்பை இனங்காட்ட இவருக்குத் துணை புரிந்தன.

பண்பான செயற்பாட்டால் பங்களிப்பை அதிகரிக்கச்செய்த மனிதராக இவர் விளங்கினார். அன்றைய காலகட்டத்தில் இவருடைய செயற்பாடும் அணுகு முறையும் பெரிதும் வேண்டப்பட்ட ஒன்றாக இருந்தது.

தான் ஏற்கனவே கற்றிருந்த ஒளி, ஒலித்துறை தொழில் நுட்ப அறிவு காரணமாக, ஏற்கனவே பல பெறுமதியான தொழில் நுட்பசாதனங்களை இவர் வாங்கிச் சேகரித்திருந்தார். இவர் மிகவும் நேசித்த பெறுமதி மிக்க இவருடைய மொத்த உடைமையும் இவைதான் எனக் கூறலாம்.

1984ம் ஆண்டு இயக்கத்தின் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் அந்த உடைமைகள் அனைத்தையும் விற்று மொத்தப்பணத்தையும் நாட்டு விடுதலை நிதிக்காகக் கொடுத்தார். இந்தச் செயலும் அந்தக் காலகட்டத்தில் யேர்மனியைப் பொறுத்தளவில் மிகவுயர்ந்த பங்களிப்பாகவே இருந்தது. தனது உடைமை முழுவதையும் அர்ப்பணித்த அந்தச் செயலுக்கு இவர் சொன்ன காரணம்- "என்னை உங்களுடன் இணைத்துக் கொண்டேன், எனது உடைமைகள் வேறு, புலிகள் உடைமைகள் வேறு அல்ல". இந்த உரையாடலின் போது மாவீரர் லெப்.கேணல் சராவும் கூடவே இருந்தார். அன்றே யேர்மனிக்கிளை சுயநலத்தைத் தூக்கியெறிந்த மிகச்சிறந்த தேசப்பற்றாளனாக சுரேந்திரகுமார் அவர்களை இனம் கண்டு கொண்டது.



மாநில பொறுப்பாளராக இவர் இருந்த காலத்திலேயே, புதிய சிந்தனையோடும் சுறுசுறுப்பான செயற்பாடுகளோடும் இயங்கிய இவர் விடுதலை உணர்வுள்ள பல கலைஞர்களை அமைப்பிற்கு அறிமுகப்படுத்தினார். அமைப்பின் கலை பண்பாட்டுப் பிரிவின் அவசியத்தை வலியுறுத்தினார். கலை பண்பாட்டுப் பிரிவு உதயமான போது அதற்கு முற்றிலும் தகுதிபடைத்த சுரேந்திரகுமார் அவர்கள் பொறுப்பாளராக்கப்பட்டார். யேர்மனிக் கிளையின் கலாச்சாரப் பிரிவுப் பொறுப்பாளராக இவர் கடமை ஆற்றிய காலம், பல புதிய கலைப்படைப்புக்கள் தோன்றிய பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். அனைத்துத் துறையிலும் ஆர்வம் கொண்ட புதிய கலைஞர்கள் ஒருங்கிணைக்கப்பட்டனர். இசைக் கலைஞர்களின் இணைப்பால் 'தமிழீழம்' இசைக்குழு உருப்பெற்றது. தமிழிசைக் கலைஞர்கள் விடுதலைக் கீதத்தை இசைக்கும் புதுமை ஆரம்பமானது. பக்திரசத்தைப் படைத்த பரதம், சுதந்திர தாகத்தை வெளிப்படுத்தி புரட்சி படைத்தது. இதன் மூலம் யேர்மனி தழுவிய கலைநிகழ்ச்சிகளை விடுதலை உணர்வு பொங்க நடத்தினார்.

விடுதலை உணர்வு பெருகியது, பெரு நிதியும் திரட்டப்பட்டது.

1986 மார்கழியில் யேர்மனி அரசால் கடைப்பிடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் சம்பந்தமான நடவடிக்கையின் போது, செயற்பாட்டாளர்கள் அனைவரும் கைது செய்யப்பட்ட வேளையில், இவர் கைதாகி பின்னர் விடுதலை ஆனார். அனைத்து முக்கியமானவர்களும் சிறையில் இருந்த வேளையில், யேர்மனிய அரசின் இறுக்கமான செயற்பாடுகளால் மக்கள் பயமுற்றிருந்த சூழலில், அமைப்பின் யேர்மனிக்கிளைப் பொறுப்பை ஏற்று இவர் புரிந்த பணி அதிசயிக்கத்தக்கது. தனது வேலையை ராஜினாமாச் செய்து கொண்டு, யேர்மனி வாழ் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருந்த வீணான பயத்தைப் போக்கவும், அமைப்பின் செயற்பாடுகளைச் சீர்ப்படுத்தவும், அனைத்து நகரங்களுக்குமான தொடர்புகளை நிலைக்கச் செய்யவும், இவர் மேற்கொண்ட முயற்சிகள் சொல்லில் அடங்காதவை. ஆறு மாதத்தில் யேர்மனி தழுவிய செயற்பாட்டை ஒழுங்கிற்குக் கொண்டு வந்தது இவருடைய நிர்வாகத் திறனுக்கு ஒரு சான்றாகும்.

பல புதிய இளைஞர்கள் நிர்வாகத் துறையில் சேர்க்கப்பட்டு பிரச்சாரம் பரவலாக்கப்பட்டு மாநில ரீதியாக தொலைபேசிச் சேவை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது, இவரது காலத்திலேயே.

விடுதலைப்புலிகள் யேர்மனிக் கிளையின் உத்தியோகபூர்வ ஏடான "தமிழீழச் செய்திகள்" இவரது கடும் முயற்சியால் வெளிவந்த ஒரு ஆக்கமாகும். கணணிமுறை வழக்கிலில்லாத அந்த நாட்களில் இவருடைய கலைத்தன்மையுடன் கூடிய பெரு முயற்சியே இந்தச் சஞ்சிகையின் வடிவமாக, உள்ளடக்கமாக அமைந்தது. தமிழீழ நிலைப்பாடு மக்களிற்குப் புலனாக வெளிவந்த ஒரேயொரு சஞ்சிகையாக இது விளங்கியது. சுரேந்தி ஒரு சிறந்த பத்திரிகையாளர் என்பதை இந்த ஏடு விளக்கி நின்றது.

சுரேந்தி அவர்கள் கற்பனை நிறைந்த பல இனிய பாடல்களை இயற்றி உள்ளார். விடுதலையை முன்னெடுக்கும் வீரமான பல பாடல்களை நித்திலா என்ற பெயரில் வரைந்து தமிழுலகிற்குத் தந்த ஒரு புரட்சிக் கவிஞர் இவர். இன்றும் நிலைத்து விடுதலையை வலியுறுத்தும் இவரது பாடல்கள் சாகாவரம் பெற்றவை.

18-10-1991 அன்று இறுதி மூச்சு முடியும்வரை இவர் ஆற்றிய சேவையும் கடின உழைப்பும் எமது அமைப்பின் யேர்மனிக் கிளையின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய சக்தியாக விளங்கின எனலாம்.

இவரது தந்தை இவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "மகனே நீ ஆற்றும் தொண்டு வரவேற்கத்தக்கது" எனக் குறிப்பிட்டுள்ளார். அதனைப் படித்துப் பேருவகை கொண்ட, தந்தைமேல் பாசம் நிறைந்த சுரேந்தி அவர்கள், தந்தையின் மறைவின் போது சிந்தை கலங்காது அமைப்பின் பணிகளில் அதிக கவனம் செலுத்துவதையே, தந்தையின் ஆன்ம ஈடேற்றலுக்கு தான் செய்யும் வழிபாடு எனக் கருதினார். அமைப்புடன் இணைந்து கொண்டு 1983ல் தமிழீழம் சென்று மண்மீட்புப் போரில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பி, அதற்கான ஆயத்தங்களைச் செய்து முடித்திருந்த சுரேந்தி அவர்கள், யேர்மனிவாழ் தமிழீழமக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த மாயையை அகற்றும் பணிக்குத் தேவையெனக் கருதி, அமைப்பால் யேர்மனியில் பணியாற்றும்படி வேண்டப்பட்டது, இவரது செயற்பாட்டின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. உவமைகளை அனாசயமாக அள்ளி எறிந்து கவிக்கோலம் போடும் உவமைக் கவிஞர் இவர்.

**'அடிவானம் கடலோடு உறவாடுமா - எமை**

**அழிப்பாரின் எண்ணம்தான் ஈடேறுமா'**

என்ற பாடலில் உவமைக் கவிஞர் என்ற முத்திரை பதித்து நிற்கிறார்.

**'புயல் ஒன்று கடந்து போர்மேகம் கலைந்து**

**புதுத் தென்றல் தவழும்நாள் வருகின்றது!'**

என்ற பாடலில்

**"விதிமாறும் வேளை சதிமாறும் என்று**

**வரலாறு ஒன்று அசைகின்றது!**

**அலையாடும் கடலும் புலி வெல்லும் என்று**

**தரை மேவி செய்தி சொல்கின்றது'**

என குறிப்பிட்டு தீர்க்கதரிசனமாக கவிபடைத்துள்ளார். அலைகடலிலே களிநடம் புரிந்து மண்காக்கும் கடற்புலிகளை இன்று நாம் பெற்றுள்ளோம். அந்த வீரத்தை தரைமேல் வந்து அலை சொல்லும் என கடற்புலிகள் தோற்றம் கொள்ள முன்னரே பாடிய தீர்க்கதரிசனக் கவிஞராக இவர் விளங்கினார். இன்று ஒலித்தட்டில் இடம்பெற்று, அவர் விதைத்த கவிதைகள், பாடலாக பலர் மனதில் விடுதலைப் பயிராகி, வீரத்தை விளைத்து நிற்கிறது.

**"நிதி வேண்டும் தமிழீழ மண்மீட்க-புது**

**விதி செய்யும் புலிப்படை தம் கரம் ஓங்க!"**

என்ற இவரது பாடல், யேர்மனி தழுவிய எமது கலை நிகழ்ச்சிகளில் மக்கள் மனதை கொள்ளை கொண்டு பங்களிப்பைப் பெருக்கியது, இவரது கவிதையின் பலத்தை வெளிப்படுத்திய சான்றாகும்.

இவருடைய இல்வாழ்க்கை பற்றி வினா எழுப்பும் போதெல்லாம் "எல்லாமே தமிழீழத்தில் தான்" என்பதே இவரது பதிலாக இருந்து வந்தது. "நான் இன்னுமொரு நாடு செல்வதானால் அது தமிழீழமாகத்தான் இருக்கும்" என்று கூறிவந்த இவர் மேலிட அழைப்பின் பேரில் சுவிஸ் நாட்டிற்கு மோட்டார் வண்டியில் பயணமானபோது, யேர்மனிய எல்லையைத் தாண்டும் முன்னரே விபத்தொன்றில், அமைப்பின் ஏனைய சகாக்களுடன் மரணத்தைத் தழுவிக் கொண்டார். உண்மையின் உறைவிடமான இந்த சத்திய புருஷனின் வார்த்தை இறுதிவரை முழுமை பெற்றதாகவே எண்ணத் தோன்றுகிறது.

புகழை விரும்பாத, ஆடம்பரத்தை ஏற்காத, பாராட்டில் இருந்து ஒதுங்கி வாழ்ந்த ஒரு மேதைதான் மேஜர் சுரேந்திரகுமார். ஒவ்வொரு செயற் திட்டத்தையும் ஒரு மூலையில் உட்கார்ந்து பதட்டம் இன்றி செய்து முடிக்கும் சிறந்த திட்டமிடல் நிபுணன்தான் மேஜர் சுரேந்திரகுமார். புலிகளிற்கே உரித்தான குறைந்த பேச்சும் நிறைந்த செயற்பாடும் உருவம் பெற்ற மனிதர்தான் மேஜர் சுரேந்திரகுமார்.

அவரை இழந்த எமக்கு அவரது வாழ்க்கை, ஒரு முன்னோடியாக, ஒரு உத்வேகமாக, ஒரு உதாரணமாக உயிரூட்டி நிற்கிறது.

www.tamilarangam.net



# வரலாற்றுத் தாயின் முன்னெச்சரிக்கை

"இதுவென்ன கொடுமை, என்னுடைய பிள்ளையை பதினொரு மிருகங் களும் என்ன பாடுபடுத்தியிருக்கின்றன? இதுவா சந்திரிகா கொடுத்த வாக்குறுதி? மக்கள் விடுவிக்கப்பட்டிருப்பதாகக் கூறு வதைக் கொண்டாடும் விதமா இது?" என தன்னெதிரே மரமாக நின்ற இராணுவப் பொலிஸ் அதிகாரியைப் பார்த்துக் கத்தினார் ராசம்மாவின் சகோதரி. கொழும்பு சவச்சாலையில் நடந்த சம்பவம் இது. கறுத்தத் துண்டு விரிப்பினால் கண்டபடி சுற்றப்பட்டு உருக்குலைந்து சிதைந்து துண்டங்களாகிவிட்ட கிருசாந்தி, பிரணவன், இராசம்மா முக்கால் அங்குல அகலக் கயிற்றால் கழுத்து இறுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட போது, உடுத்தியிருந்த அதே நீலக்கரை போட்ட வெள்ளைப் புடவையோடு சடலமாகக் கிடந்த இராசம்மா, இவர் களைப்பார்த்த பின்னர்தான் இவ்வாறு அவர் கதறினார்.

இது இராசம்மாவின் சகோதரியின் அழுகைக் குரலா? இல்லவேயில்லை. யாழ். குடாநாடு எங்கும் ஒலிக்கும் தமிழீழ அன்னையரின் அடி வயிற்று அழுகைக் குரல் அல்லவா?

செப்டெம்பர் 7ஆம் திகதி கைதடியில் இருக்காதபடியால் இன்னமும் உயிரோடு இருக்கும் பிரசாந்தி தனது இரத்த உறவுகளை இக்கோலத்தில் கண்ட துயரம் தாங்காமல் அழுது அரற்றியவாறு கூறினார்: "என்னை யாழ்ப்பாணம் போகுமாறும் அதற்காக 5 இலவச விமானப் பயணச் சீட்டுக்கள் தரப்படும் எனவும் அரச தரப்பில் கூறப்பட்டது. ஆனால் நான் போகவில்லை. போயிருந்தால் நானும் கொல்லப்பட்டிருப்பேன்." என்றார். தனது இரத்த உறவுகளின் இறுதிக் கடமைகளைச் செய்ய சடலங்களைக் கோரியபோது, முதலில் மறுக்கப்பட்டதாகவும் பின் 2 மணித்தியாலங்கள் அவகாசத்தில் அடக்கம் செய்யத் தரப்பட்டதாகவும் தான் அதற்கு மறுத்துவிட்டதால் பொலிசாரே இறுதிக் கிரியைகளைச் செய்தனர் என்றும் அவர் கூறினார். உண்மையும் அது தானே.

**விடுதலைக்குப் போராடுவது கல்விதான். போராடிப் பெறும் விடுதலையும் ஒரு தேசிய இனம் கற்க வேண்டிய கல்வி தான். எது கல்வி என்று மனத்தால் தீர்மானிக்க, எம் மக்களுக்கு வரலாறு இப்போது உதவி செய்கின்றது**

இப்போது யாழ்ப்பாணத்தில் தரித்து நிற்கும் சிங்களப் படை, தமிழீழ மக்களுக்கு இறுதிக் கிரியை செய்யத் தானே ஆக்கிரமித்து நிற்கின்றது என்பதில் எவருக்கு என்ன சந்தேகம். தலைமை ஆசிரியரான தனது விதவைச் சகோதரிக்கு மருமக்களுக்கு நேர்ந்த கதிகண்டு கதி கலங்கிப் போயிருக்கும், கொழும்பில் இருக்கும் அவரது சகோதரன் என்ன கூறுகின்றார்: "நாங்கள் ஒரு மாதத்திற்கு மேலாக இவர்கள் பற்றித் தகவல் அறியப் பெரும் முயற்சி எடுத்தோம். வடபகுதி இராணுவப் பொறுப்பதிகாரி லால் விஜயசூரியாவோ தமது படையினருக்கு எதுவுமே தெரியாது என்று கூறிவிட்டார். ஜனாதிபதிக்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் போடப்பட்ட கடிதத்திற்கு இதுவரை பதிலே இல்லை. ஒரு நேர்மையான அதிகாரி ஒருவராய் இருந்தால் இக் கொடுமைகளையிட்டுப் பதவி விலகியிருப்பார். ஆனால் இந்தக் கொடுமையை விசாரிக்கத் தன்னும் ஒருவராவது முன் வரவில்லை" என்றார்.

இது நவரத்தினத்தின் குடும்பக் கதையல்ல; எமது கதை. இந்த அநீதி அவர்களுக்காக அல்ல; எமக்காக – முழுத் தமிழீழ மக்களுக்காக. கொழும்புச் சவக்காலையில் செய்திகள் சேகரிக்க, படமெடுக்க செய்தியாளர்களுக்குத் தடை; ஒலிப்பதிவுக் கருவியை எடுத்துச் செல்லத் தடை. பல நாட்களாக் செம்மணிப் பகுதியில் புதைகுழி ஒன்றில் கிடந்த சடலங்களை அடக்கம் செய்ய 2 மணித்தியால அவகாச அரச ஆணை. "நானும் விதவை தானே – இரு பிள்ளைகளுக்குத் தாய் தானே" என்ற சந்திரிகா அம்மையாரின் தமிழீழ அன்னையருக்கான அன்பளிப்பு. இது பயங்கரவாதிகளுக்கு மட்டும் எதிரான போராம்;ஏவப்படுகின்ற எறிகணைகளுக்கு இது புரியுமாம்; எதிலும் ஒளிவு – மறைவு இல்லையாம்; தமிழ் மக்களுக்கு ஒரு குறையும் வராதாம். அப்படியானால் கிருசாந்தி, பிரணவன் பயங்கரவாதிகளா? இவர்களைப் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயும் பயங்கரவாதியா? கூடச் சென்றதால் கிருபமூர்த்தியும் பயங்கரவாதியா? பள்ளிச் சீருடைக்கு கிடைத்த மதிப்பு இதுதானா? இவை எவர் மனதிலும் இன்று எழும் கேள்விகள் – கேள்விகள் – கேள்விகள்.

ஆயிரக்கணக்கில் இப்போது கேள்விகள் எழுகின்றன. இவற்றிக்கான விடை–யென்ன? அவற்றின் பொருளென்ன?

இப் படுகொலைச் சம்பவம் ஒரு குறியீடு; ஒரு முன்னெச்சரிக்கை; வரலாற்றுத் தாய் தமிழீழ மக்களுக்கு முன்கூட்டியே விடும் அறிவிப்பு. தமிழீழ மக்களின் பலமே – அவர்களது வாழ்வின் இயக்கம். அவர்களது வாழ்வுக்குக் காரணமாகிவ–ிடக் கூடாதென்பதற்காகத் தான் இந்த அறிவிப்பு. உயிரைக் காப்பாற்ற வலிகாமம் விட்டவர் – உடமையைக் காப்பாற்ற வலிகாமம் சேர்ந்தவர் – எம்மவர் என்றாலும் எம் மக்கள் அடிமனதில் இருப்பது என்னவென்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். தமது பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமாக வேண்டும்; அதற்கு கல்வி வேண்டும்; கல்வியைப் பெற எங்கு செல்ல வேண்டுமோ, அங்கு செல்ல வேண்டும்; இதற்காக இத்தகைய பெரிய இடர்களையும் சகிக்க வேண்டும் – இது எம் பெற்றோரின் ஆழ் மனத்தில் பதிவு. இராணுவப் பகுதிக்குள் வாழ்வதை அதுதான் நியாயப்படுத்துகிறது. இது முன்னைய சுருக்கக் கதை.

இப்போதைய கதை என்ன? இது கிருசாந்தியின் கதை. தேனுகாவின் கதை என்ன? தம் பிள்ளைகளைக் கரை சேர்க்க முயன்றவர்கள் இப்போது துயரக் கடலில் ஆழ்கின்றார்கள். சீருடை தரித்து எம்மை வணங்கி, தனித்துப் பள்ளி செல்லும் பிள்ளை திரும்பி வருமா என்ற ஏக்கம் - அவர்களுக்கு வயிற்றில் நெருப்பைக் கட்டி வாழும் வாழ்க்கையை அல்லவா கொடுத்துவிட்டது. எதிர்பார்த்துக்



கிருசாந்தி - ராசம்மா - பிரனவன்

காத்திருப்பவர்களுக்காக நல்லது ஏதாவது நடக்காதா? என்ற எண்ணமும், எவ்வளவு காலம் கடத்த முடியும், காலத்தை கழிக்க முடியுமா? இது வரலாறு எழுப்பிவிட்டுள்ள வினா. விடை காண வேண்டியவர்கள் நாம்.

எமது சமூகத்தில் மூத்த தொகுதியான பெற்றோரால் பிள்ளைகளுக்காக இனி மேலும் என்ன செய்ய முடியும்? இப்போது எமது இளையோரின் முறை யென்று நிதானமாகச் சிந்திக்க வேண்டிய நேரம் இது. எம்மவர் நடந்து வந்த பாதையை மட்டுமன்றி, உலக வரலாற்றுத் தடயங்களை எல்லாம் ஒரு முறை திரும்பிப் பார்க்கும் தருணம் இது.

1970களில் என்ன நடந்தது? கல்வியை மட்டுமன்றி முழு இனத்தையுமே சிங்கள மயமாக்க, எமது வாழ்விடங்களைப் பறிக்க சிங்களம் முற்பட்டபோது யார் விழித்தெழுந்தார்கள்? யார் முன் வந்து இந்த இனத்தின் தன்மானச் சுமைகளைத் தாங்கிக் கொண்டார்கள்? எமது முன்னைய மாணவ – இளைஞர் அணியே. புலிப்படையே புதிய போராட்ட வரலாற்றைப் பிறப்பித்தனர். அன்று அவர்கள் தொடங்கிய போராட்டமே, இன்று பெரு விருட்சமாக, தமிழீழத்தின் இன மானம் காக்கும் வீரம் செறிந்த தலைமையாக முழுமை பெற்றிருப்பது நாம் காணும் யதார்த்தமல்லவா?

**எமது முன்னைய தலை முறை தொடர்ந்து நடாத்தும் போராட்டத்தில், இக்காலகட்ட இளையோரும் தமக்கான பங்களிப் பைச் செய்வது தவிர்க்க முடியாதது. இது எமது இளையோரின் கடமை.**

விடுதலைக்குப் போராடுவது கல்விதான். போராடிப் பெறும் விடுதலையும் ஒரு தேசிய இனம் கற்க வேண்டிய கல்விதான். எது கல்வி என்று மனத்தால் தீர்மானிக்க, எம் மக்களுக்கு வரலாறு இப்போது உதவி செய்கின்றது. "வருமுன் காப்பதுதான் வாழ்க்கை" என வள்ளுவர் குறலாக ஒலிக்கின்றது. இன்று எமது நிலையென்ன? விடுதலைப் போராட்டம் முனைப்பாக திருப்புமுனை நோக்கி நகர்வதைத் தடுப்பதற்காக எதிரி சகல வழிகளிலும் செயற்பட்டான். அதற்காகத் தனது இனத்தின் தலையையே பணயம் வைக்கத் துணிவது மட்டுமன்றி, தனது இனத்தையே கசக்கிப் பிழிய ஆயத்தம் ஆகிவிட்டான். இத்தகைய நிலையிலேயே தான், எமது முன்னைய தலைமுறை தொடர்ந்து நடாத்தும் போராட்டத்தில், இக்காலகட்ட இளையோரும் தமக்கான பங்களிப்பைச் செய்வது தவிர்க்க முடியாதது.

கிருசாந்தி, பிரணவன் இழப்புகளுக்கூடாக வரலாறு தெரிவிப்பது இதுதான்: இழப்புக்கள், இழப்புக்களாக அல்லாது பெறுபேறுகள் ஆகவேண்டும் என்பது தான் அது. ஒருமுறை உலகில் நிகழ்வனவற்றையும் நாம் அவதானிக்க வேண்டும். மியான்மாரில் கொடிய வல்லாதிக்கத்தை நடாத்தும் மேலாண் மைக் குழுவிற்கு எதிராகப் போராடி வரும் சூங்சான் சூசி அம்மையாரைச் சிறைப்படுத்தியபோது – வீதிக்கு இறங்கித் தோள் கொடுத்தவர்கள் – பல்கலைக் கழகத்தில் இருந்து பள்ளி வரை பயின்றவர்கள் அல்லவா?

கிழக்குத் தீமோரின் 'பிரட்டிலின் விடுதலை அமைப்பை' இந்தோனேசிய இராணுவம் நசுக்கி அதன் தலைவரையே கைது செய்து ஆயுள் கைதியாக்கிய பின்னரும் அங்கு விடுதலை விளக்கை அணையாமல் காத்து நிற்பவர்கள் யார்? பாலஸ்தீனத்திலே பல இயக்கங்களும் போராடிக் களைத்த பின் 1987களில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை, காசாப் பகுதிகளில் புரட்சியைத் தொடக்கி வைத்தவர்கள் யார்? இவ்வாறு ஒரு வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சிகளையே இப்போது தமிழீழத்திலே வரலாற்றுத் தாய் விரும்புகின்றார்.

இடப்பெயர்வின் பின் ஒரு வருடம் முடிந்து, மாவீரர் நினைவு நாள் எல்லாம் நாம் மனம் கொள்ள வேண்டியது இதுதான்.

இடப்பெயர்வின் பின் இயற்கையோடு போராடி வருகிறார்கள் எம்மக்கள். தன்னோடு போராடுபவர்களே வெற்றி நிலையை நாட்டுவர் என்பது இயற்கையே எமக்குக் கற்றுத் தரும் பாடம். இயற்கைக்கு இருமுகம் – ஒரு முகம் அவலத்தையே தரும். அதேவேளை மறு முகமோ வெற்றி நிச்சயம் என உறுதிப்படுத்துகின்ற இச்சை முகம். ◆

வே. பாலகுமாரன்

www.tamilarangam.net





# நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்

"அருண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு.

சிறிலங்காவின் சிங்கள இராணுவத்திற்கு எந்தத் தமிழனைப் பார்த்தாலும் புலியாகவே தெரிகிறது. இதில் ஆண், பெண், வித்தியாசம் கிடையாது. வயது வித்தியாசம் கிடையவே கிடையாது.

# நாட்டின் அடிமை விலங்கு நொருங்கும்

அவரது பெயர் அம்பலம் மயில்வாகனம், குமாரபுரம் பரந்தனைச் சேர்ந்தவர். வயது 72. கடந்த இரண்டு மாதமாகக் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

"இந்தத் தள்ளாத வயதில் அந்த மனிதர் ஏதோ கொலை செய்திருக்கிறார். அல்லது கொலை செய்ய முயற்சி செய்திருக்கிறார். அதுதான் சட்டத்தின் பிடியுள் சிக்கி சிறையில் வாடுகிறார்" என்றுதான், யாருக்கும் சாதாரணமாக நினைக்கத் தோன்றும். பொல்லுப்பிடிக்கிற வயதில், மனிதர் கையில் கத்தியைத் தூக்கிவிட்டார் என்று எண்ணத் தோன்றும்.

எழுபத்தியிரண்டு வயதுக் கிழவர். "காடு வா வா என்கிறது, வீடு போ போ" என்கிற வயதில் கத்தியாவது......., தூக்கிறதாவது......... அம்பலம் மயில்வாகனம் அவர்களே தனது வாயால் தனது சோகக் கதையைச் சொல்கிறார் படியுங்கள்:

"07-09-96 இல் ஆனையிறவு இராணுவத்தினர் பரந்தனில் என்னைக் கைது செய்தனர். முகாம் கொண்டுபோய் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் 13-09-96 இல் கையளித்தனர். 18-09-96 கப்பல் மூலம் என்னைக் கொழும்பு கொண்டுவந்தனர்.

19-9-96 இல் அநுராதபுரம் நீதவான் முன் ஆஜர் செய்து, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ளனர். விமானக் குண்டு வீச்சுக்களினால் பரந்தனிலுள்ள எனது வீட்டை விட்டு இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்புக்குப் போயிருந்தேன்.

பசியின் கொடுமை தாங்காது, வீட்டிலிருந்து உணவுப்பொருட்களை எடுக்க 04-09-96 இல் வீடு திரும்பினேன். 07-09-96 இல் இராணுவத்தினர் என்னை எனது வீட்டில் வைத்துக் கைது செய்தனர். எனது கண்களைக் கட்டி முகாம்கொண்டு போனார்கள். சங்கிலியால் என்னைத் தாக்கினார்கள். 13-9-96 இல் என்னைக் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் கையளித்தார்கள். என்னிடம் அவர்களால் வாக்குமூலம் பெறமுடியவில்லை. 16-9-96 இல் என்னை யாழ்ப்பாண மருத்துவமனையில் சேர்த்தார்கள். 72 வயதுடைய எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள்".

அம்பலம் மயில்வாகனத்தின் விடுதலையை வேண்டி, சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி உயர்நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் ஒரு பகுதியைத்தான் மேலே தந்திருக்கின்றேன்.

சிங்கள இராணுவமும், சிங்களப் பொலிசாரும் கிழவரைக் கிழவராகப் பார்க்கவில்லை. கிழட்டுப் புலியாகவே பார்க்கிறது. கிழட்டுப்புலி என்றாலும், புலி, புலி தானே!

அம்பலம் மயில்வாகனத்தாரைக் கைது செய்ததே தவறு. அப்படிக் கைது செய்திருந்தாலும், விசாரித்துவிட்டு விடுதலை செய்திருக்க வேண்டும். அல்லது அவரை அவர்களது உறவினர்களிடத்தோ அல்லது அரசாங்க அதிபரிடமோ ஒப்படைத்திருக்க வேண்டும். குறைந்த பட்சம், யாழ்ப்பாணத்திலேயே சிறை வைத்திருக்கலாம்.

ஆனால் இராணுவமும், காவல்துறையும் அவரைச் சங்கிலியால் தாக்கிச் சித்திரவதை செய்துவிட்டு காங்கேசன்துறை, அநுராதபுரம், கொழும்பு என்று இழுத்து வந்திருக்கின்றது.

"அன்பார்ந்த தமிழ் மக்களே, விரைவில் உங்களை விடுதலைப்புலிகளின் இரும்புப்பிடிக்குள் இருந்து விடுவித்து, உங்கள் வாழ்வில் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்க நானும் எனது அரசும் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றோம்" என்று சனாதிபதி சந்திரிகா பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரங்களின் மூலம் விடுத்த அழைப்பின் இலட்சணத்தை இப்போதுதான் புரிந்து கொள்ள முடிகிறது.

**"அன்பார்ந்த தமிழ் மக்களே, விரைவில் உங்களை விடுதலைப்புலிகளின் இரும்புப்பிடிக்குள் இருந்து விடுவித்து, உங்கள் வாழ்வில் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்க நானும் எனது அரசும் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றோம்""**

**"ஆடுகள் நனைகிறது என்று, ஓநாய் அழுத கதை" க்கும் சனாதிபதி சந்திரிக்காவின் பேச்சுக்கும் வித்தியாசமே இல்லை.**



"ஆடுகள் நனைகிறது என்று, ஓநாய் அழுத கதை" க்கும் சனாதிபதி சந்திரிக்காவின் பேச்சுக்கும் வித்தியாசமே இல்லை.

ஒரு விதத்தில் அம்பலம் மயில்வாகனத்தார் "அதிர்ஷ்டசாலி." தனது கதையைச் சொல்ல, சிங்கள இராணுவம் அவரை உயிரோடு விட்டு வைத்துவிட்டது.

கிருஷாந்தி குமாரசாமி
இராசம்மா குமாரசாமி
பிரணவன் குமாரசாமி
கிருபாமூர்த்தி சிதம்பரம்
ரஜனி வேலாயுதபிள்ளை

இவர்களைப் போல், மயில்வாகனத்தாரின் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு, புதைகுழிக்குள் போட்டு மூடியிருக்கலாம். அல்லது ஓசைப்படாமல் 'குளோஸ்' செய்து விட்டு பத்தோடு பதினொன்றாகக் 'காணாமல் போனோர்' பட்டியலில் சேர்த்திருக்கலாம்.

எங்கள் தாயக பூமியில் இராணுவத்தின் அரசபயங்கரவாதம், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. மனிதவுரிமைச் சங்கங்கள், தாங்கள்தான் சனநாயகத்தின் காவலர்கள், சமாதானத்தின் தூதுவர்கள் என்று மார்தட்டும் மேற்குலக நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் தமிழீழத்தில் நடைபெறும் படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், சித்திரவதைகள், காணாமல்போதல் இவற்றைக் கண்டு கொள்வதோ, கண்டுகொள்ள முயற்சிப்பதோ இல்லை. மாறாக, சிறிலங்கா அரசிற்கு நிதியும், ஆயுதங்களும், இராணுவப் பயிற்சியுமளித்து அரச பயங்கரவாதத்திற்குத் தூபதீபம் காட்டுவதிலேயே அக்கறை காட்டுகின்றன.

அண்மைக் காலத்தில், 14-06-96 இல் புங்கன் குளம் இராணுவக் காவலரணில் வைத்துக் கைதான அரியாலையைச் சேர்ந்த நாகமுத்து செல்வரத்தினம் (வயது 57) என்ற ஆசிரியர் காணாமற் போயுள்ளார். 12-08-96 இல் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இராசையா சுப்பிரமணியம் (வயது 22) காணாமற் போயுள்ளார். 22-06-96 இல் இராணுவத்தால் அழைத்துச்செல்லப்பட்ட யாழ். புங்குடுதீவைச் சேர்ந்த அ. அமல்ராஜ் (வயது 24) காணாமற்போயுள்ளார்.

தெய்வேந்திரம் நகுலேஸ்வரன் என்ற 24 வயது இளைஞர் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார்.

திருகோணமலைச் சிறையை உடைத்துத் தமிழ் கைதிகள் தப்பிஓடிய சம்பவத்தில் தப்பி ஓடாத ஐந்து இளைஞர்களைச் சிறிலங்கா இராணுவம் பிடித்துச் சென்று, கடற்கரையில் வைத்துச் சுட்டுக்கொன்றுள்ளது. அப்படிக் கொன்றுவிட்டு, தப்பிஓடும்போது சுட்டுக்கொன்றதாக இராணுவம் அறிவித்துள்ளது. கொல்லப்பட்டவர்கள் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இராணுவம் அறிவித்தது.

கடந்த யூலை மாதத்தில், புத்தளத்தைச் சேர்ந்த இரு தமிழ்ப் பொதுமக்கள், சிறிலங்கா இராணுவத்தால் கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டனர். மறுநாள் அவர்களது சடலங்கள், வீதியோரத்தில் வீசப்பட்டிருந்தன.

பாரிசில் ஒக்ரோபர் மாதம் 26ம் திகதி விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப்பொறுப்பாளர் லெப். கேணல் நாதன், "ஈழமுரசு" பத்திரிகை ஆசிரியர் திரு. கஜன் ஆகிய இரு விடுதலைப் புலிகள் சந்திரிகா அரசின் ஏவல் நாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம், கல்குடா பட்டியடிச்சேனையைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர், சிறிலங்கா இராணுவக் குண்டர்களால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார்.



29-10-96 இல் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் சந்திரிகாவின் இராணுவப் பயங்கரவாதிகள் சுட்டதில், 18 வயது தமிழ்ப் பெண் பலியாகினார்.

03-11-96 இல் நீர்கொழும்பில் சுமார் 150 தமிழ் மக்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். 144 பேர் விடுவிக்கப்பட்டனர். மிகுதி 6 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 13, 14 வயதுடைய பெண்களாவார்.

5-11-96 இல் மட்டக்களப்பு களுவங்கேணியில் வெறிபிடித்த சிங்கள இராணுவப் பேய் சுட்டதில், ஒரு பொதுமகன் கொல்லப்பட்டார்.

கைதடி இராணுவத்தடை முகாமைத் தாண்டிச் சென்ற அதே ஊரைச்சேர்ந்த

**- நக்கீரன் -**

கணேச சர்மா சிவராம், தவச்செல்வம் சுப்பிரமணியம், பஞ்சலிங்கம் காந்தன் ஆகிய

மூன்று தமிழ் இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர்.

07-11-96 இல் பண்டாரவளையில் தமிழ் வர்த்தகர்கள், ஊழியர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். 4 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் 500 இளைஞர்கள், யுவதிகள் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களில் முப்பது பேரை விடுதலைப்புலிகள் என்ற

தொடர்ச்சி 3ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உண்மைக் கதை

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் - உணர்வு பூர்வமாக - நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக - நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மாளைக் கும்பிடுறானுகள்.....!" என்ற பெயரிலும், இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள வெறிப் படை -

'அமைதிப் படை' - ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் - போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் - போராளிகளை நேசித்து, அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் .......

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.

அவற்றில்....... ஓர் நிகழ்வு.

**"வயிறு நோகுதப்பா.....என்னால தாங்க முடியுதில்லையே......"**

**பழைய வேட்டி ஒன்றைக் கிழித்து வந்து உழவு வண்டியில் வெள்ளைக் கொடி கட்டி விட்டு - வீட்டின் உள்ளே போய் மனைவியைக் கை கொடுத்து நடந்தது போலவும் தூக்கியது போலவுமாக அழைத்து வந்து, உழவுப் பொறியின் பின்புறம் இருந்த பெட்டியில் மெதுவாக ஏற்றி, சாய்ந்து படுக்க வைத்தான். துடித்து அலறிக் கொண்டிருந்தவள், அவன் படும் பாட்டைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். வண்டி கிளம்பிற்று.**

பனை மரங்கள் அசைவற்று நின்றன. ஒரு மரங்கொத்தி பட்ட மரத்தை அலகால் குத்திப் பொந்து போட்டுக் கொண்டிருந்தது.

'வயிறு நோகுதப்பா ....... என்னால தாங்க முடியுதில்லையே ......'

விம்மிக் கொண்டே கண்ணீர் தலையணையை நனைக்க, பாயில் புரண்டு துடித்தாள் அவள்.

பிள்ளைப் பேறு.

ஊரெல்லாம் வீட்டுச் சுவருக்குள்ளே அடைபட்டுக் கிடந்த அந்த 1987 கார்த்திகையில், அவன் வெளியே எட்டிப் பார்த்தான் – வானம் இருண்டு கிடந்தது.

எங்கோ பத்து வீடு தள்ளி இந்திய வெறிப்படையின் பீரங்கிக் குண்டு விழுந்து வெடித்தபோது எழுந்த பேரோசையில் நடுங்கியவனாய், மீண்டும் வீட்டுக்குள் நுழைந்தான். வயிற்றைப் பொத்திப் பிடித்தபடி அவனை அண்ணாந்து பார்த்து 'ஓ' என்று அழுதாள் அவள்.

புத்தூரில் இருந்து யாழ்ப்பாணம் மருத்துவ நிலையத்துக்கு பத்துக் கட்டை போயாக வேண்டும். இந்த நேரத்தில் எப்படிப் போவது? எவன் காரை வாடகைக்கு விடப் போகிறான்? வழி நெடுகிலும் இந்தியப் படை வெறியர்கள் நிற்கிறார்களாம். யாழ்ப்பாண மருத்துவ நிலையம் கூட இப்போது அவர்கள் கையில்தானாம், தலை சுற்றி, முகமெல்லாம் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது.

புத்தூரில் அது புதுக் குடும்பம். இதுதான் அவளுக்குத் தலைப்பிள்ளைப் பேறு. அறுவடை நேரத்தில் நெற்பயிர் ஒன்று கதிர் கருகிவிடும் போல – சுருண்டு வளைந்து துடித்துப் போராடுகிறது. தமிழீழம் முழுவதையும் எரித்துக் கொண்டிருக்கும் நெருப்பின் அலைகள் ஓங்கி வீசுகின்றன.

புலிப்படை பழையபடி தலைமறைவு இயக்கமாகி விட்டதாம். இந்தியப் படைக்கு நல்ல அடியாம். நூற்றுக்கணக்கில் இந்தியப் படை வெறியர்களின் பிணங்கள் விமானங்களில் போகின்றனவாம். இந்தியப் படை போடும் வெறியாட்டத்துக்கு புலிகள் வேறு எப்படித்தான் பரிசு கொடுப்பார்கள்? பெண்களை எல்லாம் அம்மணம் ஆக்கி – கெடுத்து – கணவர்மார்களைக் கொன்று – மொத்தத்தில் மகாத்மா காந்தியையே இந்தியப் படை கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

புத்தூரில் தெரிந்த நாலு 'கார்'க் காரர்களை அணுகி "அவளுக்கு நோவு தொடங்கிற்றுது பாருங்கோ – யாழ்ப்பாணம் போக வேணும்......" என்று கலங்கிய கண்களோடு கெஞ்சினான் அவன். எல்லோரும் துடித்தார்கள் – ஆனால் உதவுவதற்கு அவர்கள் மனம் விரும்பினாலும், விட்டுவிட்டு அதிரும் அந்தத் துப்பாக்கிகளின் கொடுமையான வேட்டோசை ...... பாவம் ...... அவர்களும் மனிதர்கள் ........

"இந்த நேரத்தில் எப்படியப்பா" என்று முனகினார் ஒரு கிழவர்.

அவன் தொங்கிய தலையோடு வீடு திரும்பினான்.

....... இருந்து பார்!"

✿ ✿ ✿

பெரிய வெடிகுண்டு ஒன்று எங்கோ அதிர்ந்து வெடித்தது. உழவு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தவன் அசைந்து திரும்பிப் பார்த்தான் – அவள் காதைப் பொத்தியபடி பெட்டியில் நடுங்கிக் கொண்டிருந்தாள். "இந்தியப் படை சுடுகுது போலை ..... பயமா இருக்குதப்பா. ஐயோ வயிறு நோகுதே ......!" அவளின் ஓலம் வண்டி இரைச்சலிலும் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

ஒரு கட்டை தூரத்தை வண்டி தாண்டி ஆயிற்று. தொலைவில் காக்கி உடைகளின் நடமாட்டம் தெரிவதை இப்போது அவன் கவனித்தான். இந்தியப் படை தடை போட்டிருக்கிறது போலத் தெரிகிறது. வேகத்தை மெல்ல மெல்ல நத்தையைப் போல் வண்டியைச் செலுத்தினான். என்ன நடக்கும்? உடல் படபடக்கத் தொடங்கிற்று.

"ஸ்ராப்!" ஆங்கிலத்தில் யாரோ கத்தினார்கள்.

வண்டியை நிறுத்தினான். துப்பாக்கிகளோடு நாலு திசைகளிலும் இருந்து நூற்றுக் கணக்கில் திடுதிடு என்று இந்தியப் படை வெறியர்கள் ஓடிவருவது தெரிந்தது. இத்தனை பேர் யாழ்ப்பாணத்திலா? ஒரு மீசைக்காரன் துப்பாக்கி முனையை நேரே மார்பில் வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டான். என்ன செய்வது? தளதளத்த குரலில் அவன் முனகினான் ......

"இவள் கர்ப்பிணி ஐயா ...... பிள்ளைப் பேறு ...... யாழ்ப்பாணம் ஆசுபத்திரிக்குப் போக வேணும் ......"

# தெருவெல்லாம் சுடுகாடாய்

வாசலை நெருங்கும்போதே அலறல் ஓசை கேட்டது. அவள் துடிக்கிறாள் ...... துடியாய்த் துடிக்கிறாள் ...... யாழ்ப்பாணத்துச் செம்பாட்டு மண்ணைப் போல் முகமெல்லாம் சிவந்தது.

பெட்டியோடு சிற்றுழவுப் பொறி ஒன்று தோட்டத்துக்குப் பக்கத்தில் நின்றது. 'லான்ட் மாஸ்டர்' என்ற பெயரில், உழவுக்கு ஒரு காலத்தில் சிறிலங்கா அரசு அறிமுகப்படுத்திய உழவு வண்டி அது. மனைவியை இதில் ஏற்றிக் கொண்டால் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்து விடலாம். ஓடிப் போய் அதில் ஏறி, அவனே வண்டியை வாசலில் கொண்டு வந்து நிறுத்தினான். அவனுக்கு அதை ஓட்டத் தெரிந்திருந்தது. பழைய வேட்டி ஒன்றைக் கிழித்து வந்து உழவு வண்டியில் வெள்ளைக் கொடி கட்டி விட்டு – வீட்டின் உள்ளே போய் மனைவியைக் கைகொடுத்து நடந்தது போலவும், தூக்கியது போலவுமாக அழைத்து வந்து, உழவுப் பொறியின் பின்புறம் இருந்த பெட்டியில் மெதுவாக ஏற்றி, சாய்ந்து படுக்க வைத்தான். துடித்து அலறிக் கொண்டிருந்தவள், அவன் படும் பாட்டைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். வண்டி கிளம்பிற்று.

வீட்டுக்குப் பக்கத்தில் ஆடுகள் தெருவோரத்தில் காய்ந்து போய்ப் படுத்துக் கிடந்தன. ஆடுகளுக்குப் பலா இலைச் சருகு பொறுக்கிப் போடும் கிழவர் எங்கே போனாரோ தெரியவில்லை. யார்தான் தெருவில் இருக்கிறார்கள் ........? மனிதர்களே இல்லாத வெறிச்சென்ற பாலைவனம் தெருவாகிக் கிடக்கிறது.

✿ ✿ ✿

போன ஓர் ஆண்டு காலத்தில் இந்தத் தெருவால் அவனும் அவளும் பலமுறை பயணம் போயிருக்கிறார்கள். அது புலிகள் கையில் யாழ்ப்பாணம் இருந்த காலம். திருமணம் ஆகிக் குனிந்த தலை நிமிராமல் இதே தெருவால் தானே அவள் போனாள் ........

ஒருமுறை, சிங்களப் படைவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத் விடுதலைப் புலித் தளபதி லெப். கேணல் ராதாவின் வீர உடல் இதே தெருவால் ஊர்வலம் போனபோது, அவள் தெருவில் நின்று கண் கலங்கியிருக்கிறாள். அப்போது வெளைப் பார்த்துச் சொன்னது அவனுக்கு நினைவிருக்கிறது.

"நமக்குப் பக்கத்துலை இந்தியா இருக்கிறதைச் சிங்களவன் மறந்திட்டான் ....... இந்தியப் படை ஒரு நாள் இங்கே வந்து நம்மை எல்லாம் காப்பாத்தும்

ஒரு முரடன் "ஓ!!" என்று வாய் கிழியச் சிரித்தான். அவர்கள் எல்லோரும் உழவுப் பொறியின் பின்னால் இருந்த பெட்டியை மொய்க்கத் தொடங்கினார்கள். வெறிபிடித்த காக்கிச் சட்டைக்காரன் ஒருவன் அவள்



மார்பைக் கையால் இழுத்துப் பிடிக்க, அடுத்தவன் அவள் முகத்தை தடவத் தொடங்கினான்.

"அம்மா" என்று கத்திக் கொண்டே மயங்கி விழுந்தாள் அவள். அவனும் கூடவே "அம்மா!" என்று கூச்சலிட்டான்.

அமைதி நிலவிற்று.

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர் நாள் நிகழ்வுகள் - 1996

## இத்தாலி - பலெர்மோ மாநகரில்...



மாவீரர் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதி

## இத்தாலி - வெரிசெல்லி நகரில்...



ஆக்கிரமிப்பு பகுதிக்குள் இராணுவம் மக்கள் மேல் புரியும் அட்டூழியங்களை விளக்கும் நாடகம்

## நோர்வே - ஒஸ்லோ மாநகரில்....



கிருசாந்தி, அவரது குடும்பத்தினரை இராணுவம் படுகொலை செய்ததைச் சித்தரிக்கும் நாடகம்

நாடகத்தின் ஒரு கட்டமாக படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்கள் எடுத்துச் செல்லப்படுவதை விளக்கும் காட்சி



## யேர்மனி - கேர்ண் நகரில் ...




நாட்டிய நாட்டிய நாடகத்தின் ஒரு காட்சி...




குலை வாழை தோரணம் கட்டி மாவீரரின் தியாக நிகழ்வுகளை வரைந்து அலங்கரிக்கப்பட்டிருக்கும் மண்டப முகப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர் நாள் நிகழ்வுகள் - 1996

## பிரித்தானியா - இலண்டனில் ....




தமிழீழப் போரின் கள நிலமையை விளக்கும் வில்லிசை நிகழ்ச்சி



இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவ மணிகள் மாவீரர் பாடலை இசைக்கும் காட்சி

## தெருவெல்லாம் சுடுகாடு...

தோய்த்துக் கசக்கிப்போட்ட துணியைப் போல் அவள் சுருண்டு கிடந்தாள்.

நெஞ்சில் இருந்த துப்பாக்கியைத் தளர்த்தி அவனைப் பார்த்து, "சரி, நீ போகலாம்" என்று கட்டளையிட்டான் மீசைக்காரன்.

மெதுவாக வண்டி தடை தாண்டி நகரத் தொடங்கிற்று.

"இது என்ன கொடுமை!"

வண்டியை ஓட்டியவன் கண்களில் ஆறாக நீர் பொங்கிப் பாய்ந்தது.

ஒரு கட்டை தூரம் தாண்டித் தெருவோரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு, பக்கத்து வீட்டில் போய் தண்ணீர் வாங்கி வந்து அவள் முகத்தில் தெளித்தான் அவன் – மெதுவாகக் கண்களைத் திறந்தவள், வயிற்று நோவால் மீண்டும் "ஓ" என்று அலறத் தொடங்கினாள். தண்ணீர் கொடுத்த வீட்டுக்காரர் குடும்பம் வீட்டுக்கு வெளியே வராமல், வேலிக்கு உள்ளேயே நின்று இரங்கி முனகியது.

"பல்லைக் கடிச்சுத் தாங்கிக் கொள்ளு ..... எப்படியோ யாழ்ப்பாணம் போயிரலாம் ......" என்று தலையை வருடி விட்டான் அவன்.

"வேணாமப்பா ...... வீட்டுக்கே போயிடுவம். இந்த மிருகங்களை இன்னொரு தடவை பார்க்கக்கூடாது .....ஐயோ!"

வயிற்றைப் பொத்திக் கொண்டு அவள் மீண்டும் கத்தினாள்.

அவன் அவள் பேச்சைக் கேட்கவில்லை.

அவளுடைய உடல்நிலை அவனுக்குத் தெரியும். யாழ்ப்பாணத்தை நோக்கி வண்டியைச் செலுத்தினான். முரட்டு வேகத்தில் வண்டி இயங்கிற்று. ஆற்றலுக்கு மேலே வண்டியின் சில்லுகள் சுழன்று கதறின.

தொடர்ந்து வந்த மூன்று சோதனைத் தடைகளையும் அவர்கள் நெருப்பைக் கடப்பது போலவே தாண்டினார்கள். ஒரு தடையில் அவள் வயிற்றைத் தடியன் ஒருவன் விரல்களால் அமுக்கிப் பார்த்தபோது, அவள் இரண்டாவது தடவையாக மயங்கி விழுந்ததைக் கண்டு அவன் விம்மி விம்மி அழுதான்.

இம்முறை அவள் தானாகவே மயக்கம் தெளிந்தாள்.

ஐந்து கட்டைத் தூரத்தை எப்படியோ கடந்து, கோப்பாய் சந்தியை இப்போது அவன் வண்டி நெருங்கிக் கொண்டிருந்தது.

பாதி வழிப் பயணம் முடிந்தாயிற்று.

கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு நன்றாக உற்றுப் பார்த்தான். தூரத்தில் தெளிவாகத் தெரிந்தது. மீண்டும் வேகத்தைத் தொடங்கினான் ...... இங்கே என்ன நடக்கும்? முந்திய தடைகளில் கண்ணுக்கு முன்னாலேயே மனைவிக்கு நிகழ்ந்த கொடுமைகள் நெஞ்சை உலுக்கி எடுத்தன. புயலை நோக்கி அவன் வண்டியைச் செலுத்துகிறானா? தெரு ஓரத்தில் ஒரு சொறிநாய் பட்டப்பகலில் மாறி மாறி ஊளையிட்டது. தடைமுகாமுக்குப் பக்கத்தில் வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினான் அவன்.

ஆங்கிலமும் – இந்தியும் ஏதோதோ கூச்சலுமாய் அந்தக் கொடிய விலங்குகள் பாய்ந்து வருவதை இப்போது அவர்கள் பார்த்தார்கள்.

இந்திய வெறிப்படை தன் வழமையான காட்டுமிராண்டித்தனத்தில் இறங்கிற்று.

வானத்தை நோக்கி ஒர முரடன் துப்பாக்கி வேட்டுக்களை மளமளவென்று தீர்த்தான்.

கூட்டமாக அவர்கள் வண்டியை மொய்த்துக் கொண்டார்கள்.

"பாரத் மாதா கீ ஜெய்!"

வானத்தை இடித்த முழக்கத்தோடு ஒருவன் துப்பாக்கியால் ஓங்கி முகத்தில் அடிக்க – கீழே விழுந்த கணவனைப் பார்த்து, "அவரை அடியாதீங்கோ!" என்று முழு வலிமையையும் திரட்டிக் கூச்சலிட்டாள் அவள்.

சண்டாளர்கள் அவள் பக்கம் திரும்பினார்கள்.

கையைக் கொடுத்து, ஒருவன் அவளை வெறித்தனமாகப் பெட்டியில் இருந்து கீழே இறக்கினான்.

"அவள் கர்ப்பிணி பாருங்கோ – அவளைத் தொடாதீங்கோ!"

நிலத்தில் இரத்தம் தோய்ந்த முகத்தொடு கிடந்து கத்திய அவன் குரலை, யாருமே பொருட்படுத்தியதாய்த் தெரியவில்லை.

"சேலைக்குள்ளே குண்டு இருக்குதா?"

ஒரு வெறியன் குடிபோதைச் சிரிப்போடு, அரை குறைத் தமிழில் அவளைப் பார்த்துக் கேட்டான்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"சேலையை உயர்த்து!" என்று கத்தினான் இன்னொருவன்.

"பாவிகளே! ஐயோ! ஐயோ!" என்று அவள் தலையில் அடித்து ஓலமிட்டாள்.

எல்லாம் முடிந்துவிட்டது.

வதைகளைச் சுமந்த சடலமாய் அவள் வானத்தை விறைத்துப் பார்த்த கண்கள் மூடாமல் – அசைவற்றுக் கிடந்தாள்.

முகத்தைக் கைகளால் பொத்திப் பிடித்துக் கொண்டு ஒரு சின்னஞ்சிறு பள்ளிக்கூடச் சிறுவனைப் போல் அவன் தேம்பித் தேம்பி அழுதான்.

தெருவில் உழவு வண்டி நெருப்பில் எரிந்து கொண்டிருந்தது. "ஐயா, சவத்தை ஊருக்குக் கொண்டு போக வேணும்"

இந்தியப்படை அதிகாரி ஒருவரைப் பார்த்துக் கெஞ்சினான், அவன்.

வாயில் இருந்த சுங்கானை அவர் வெளியே எடுத்தார்.

"அதெல்லாம் முடியாது – தெரு ஓரத்தில் எரி – போ!"

அவன் அவளைத் தூக்கிச் சென்று தெருவோரத்தில் நின்ற நெடிய பனை மரத்துக்குக் கீழே கிடத்தினான். பட்ட பனைமரத்தின் கட்டைகளைத் தூக்கி வந்து அவள் உடலில் மேல் போட்டான்.

நெருப்பு வைத்த நேரத்தில், அவன் காதில், இந்தியப் படை வெறியர்கள் கூட்டமாகச் சந்தியில் நின்று பாடிய அந்தப் பாடல் தெளிவாகவே கேட்டது!

அவர்கள் கூத்தாடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தார்கள்.

"ஜன கண மன அதி
நாயக ஜயகே
பாரத பாக்ய விதாதா!"

ஆம் அந்த இந்தியப் படை வெறியர்கள் இந்தியாவின் சுதந்திர கீதத்தைப் பாடுகிறார்கள். ✵

## "நம்புங்கள் தமிழீழம் நாளை..."

முனைகளில் போர் வியூகங்களை வகுத்துள்ளார்.

முதலாவதாக, விடுதலைப்புலிகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடையே இருந்து கிடைக்கும் நிதியுதவியை வெட்டிவிடுவது. பாரிஸ் படுகொலைகள் இதனை நிரூபிக்கின்றது.

இரண்டாவதாக, தமிழினத்தின் தேசியத் தலைவர் பிரபாகரனை வெளிநாட்டு நவீன இராணுவப் போர் நுட்பங்களைப் பெற்று கொன்று விடுவது. சிறிலங்காவின் அழைப்பின்பேரில் சிறிலங்காவிற்குச் சென்றிருக்கும் அமெரிக்க உளவுத்துறை இதனை மெய்ப்பிக்கின்றது.

சனாதிபதி சந்திரிகாவின் சதித்திட்டங்களை முற்று முழுதாக முறியடித்து, தாயக விடுதலைக்காகச் செருக்களம் ஆடிவரும் விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்தி, தலைவர் பிரபாகரனின் தோள் சுமையைக் கொஞ்சம் குறைக்க வேண்டிய வரலாற்றுக்கடமை புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடையது.

தாயக விடுதலைக் கனவுகளை நெஞ்சிலே சுமந்து, செருக்களத்தில் தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்து, விடுதலை வேள்வியில் ஆகுதியாகிவிட்ட பத்தாயிரத்திற்கும் அதிகமான மாவீரர்களுக்கு – எமது தியாக தீபங்களுக்கு நாங்கள் செலுத்தக்கூடிய மிகப்பெரிய அஞ்சலி, அந்த மாவீரர்களின் தாயகக் கனவுகளை நனவாக்குவதாகும்.

தாயக விடுதலையில் பங்கு கொள்ளும் வாய்ப்பு, இப்போதுள்ள தலைமுறைக்கு மட்டுமே உண்டு. அந்த வாய்ப்பை நாம் நழுவ விடக்கூடாது.

தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழம் பிறந்தே தீரும். இதனை எத்தனை சந்திரிகாக்கள் வந்தாலும், எத்தனைச் சதித்திட்டங்களைத் தீட்டினாலும் தடுத்து நிறுத்த முடியாது.

"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்" ✵

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பூமி ஒரு நாள் இச் சரிதம் படிக்கும்

இரத்தமும் சதையும்
நரம்பும் உணர்வும் கொண்ட மனிதர்களே,
கருநெருப்பாய்க் கனன்று
விடிவுக்கு ஒளிசொரிய
பேருரைக்க முடியா வாழ்வுக்குள்
எப்படி உருமாறிக்கொண்டீர்?

கல்லிருந்த நீராய்,
காற்றிழைத்த புயலாய்,
சொல்ல முடியா எம்வரிக்குள் சோதியாய்,
இல்லையென்றெம் - இதயம்
ஏற்க முடியாது ஏன் சென்றீர்?


நீள் விரிந்த எம் நிலத்தின்
வாழ்வெரிக்க வந்தவர்கள்
வரலாற்றைச் சிதைத்தவரே,
நினைவுகளிற் கரந்துறைந்து
உணர்வுக்குள் உள்ளொளித்து,
நெருப்பாற்றினடியே நீச்சலிட்டு,
நெஞ்சினில் அனல் பரப்பிச் சென்றவரே,

விழி சொரிந்து நீர் பெருக்க
மனம் எரிந்து விளக்கெரிக்கும்
சோதியிற் தெரியும் - எம் சொந்தங்களே,
வடிவமிட்டுக் காட்டமுடியா
வாழ்வுக்குள் உமையுருக்கி
வசந்த காலத்தை வரவேற்க
கருகுதற்கே முகையவிழ்த்து எம்
காலத்தை விரைந்து
நகர்த்திட்ட புனிதர்களே,

விசையெடுத்த பூகம்பங்களாய்,
பகைவன் குடியிருந்த வீட்டுள்
அசைவின்றிப் புகுந்தீர்.

நம் நடை தொடர்ந்த பாதையில்
இடை வந்த தடை தகர்த்தீர்.
நேற்றும்மை வீதியிற் கண்டதாய்
காற்றெம் காதிலுரைக்கின்றது.
நிலவு முகங் கண்டு நிறைந்ததாய் நினைக்கிறது.
தெருவுப் புழுதி உமைத்
தொட்டதாய் சிலிர்க்கின்றது.
சாதனை உச்சிகள் ஏறிய சாவிலும்
பெயரிழந்துறங்கும் உம்மைக்
காலம் தனக்குள் சுமந்ததாய் உயர்கின்றது.

தீயை நீர் தீண்டிய
கடைசித் துளிகளை,
கையசைப்புக் காணாத
இறுதிக் கணங்களை,
இலட்சிய வழி செலுத்தி
வழியனுப்பி வைத்த பெருந் தலைவன்
அருகிருந்த பொழுதுகளை,
முகவரியிடாது முழங்கிய உம்மூச்சுக்களை,
உணர்ந்து கொள்ளத் துடிக்கும்
இத்தாய் நிலத்தின் தவிப்பு
அளவிட முடியாதது.
மொழிகளால் உணர்த்த முடியாதது.
உறவுகளுக்கு
உரிமையிடாத உம் பிரிவை



எப்படி நாங்கள் உரைப்போம்?
காற்றை உலுக்கிய வெடியதிர்வில்
இத்தேசமே ஒருமுறை குலுங்கியதை
பூமி ஒருதரம் புருவமுயர்த்தியதை
நினைவுகளிற் தீயெரிய
நீங்களென்று தெரிந்த பின்பும்
உச்சரிக்க முடியாத எம் வார்த்தைகளை,
எப்படி நாம் உருவகிப்போம்?
நேற்றும் அதற்கு முதல் நாளும்
எங்கள் தேசத்தில்,
எல்லை தாண்டிப் பகைப்புலத்தில்,
பயணித்த உம் பாதச் சுவடுகளை
எப்போது நாம் காண்போம்?

கண்விழித்த பூவிதழில்
மேனி தொட்டுச் செல்லும் காற்றசைவில்,
செவி நுழைந்து நிறையும் தமிழொலியில்
புன்னகைக்கும் சிறுமழலைச் சிரிப்பொலியில்,
உம்முகங் கண்டு கொள்ளும் இந்நிலம்.

புழுதியடங்கா வீதித் தூசியில்,
சந்தம் விலகா இதயத் துடிப்பொலியில்,
மூச்சுக்குள் நிறுத்திய வெம்மையில்,
இன்னும் நீர் வாழ்வதாய் மனம் உணர்த்த,
விரையும் எம் கால்களிலும் உம் வேகம்.

இரத்த வரிகளில்
இலட்சியக் கவிகளை
இருள் தொலைந்து விடியும்வரை எழுதுவோம்.
அள்ளக் குறையா நீராய்
எம்முள் உணர்வு சுரந்தளிக்கும் உயிர்ப்புக்களே,
இப் பிரளயத்தின் வேர்களுக்கு
வேகமளித்து,
சாக்குரலின் மத்தியிலும்
எழுதப்படும் இச்சரிதத்தைப்
பூமி ஒரு நாள் படிக்கும்.

எம் திசையில் கதிர் பரப்பி உதியுங்கள்
ஏறிமிதிக்க வருவோர்
எரிந்து பொசுங்குவர் என
உறுமும் எம் குரலில் இழையுங்கள்.
பகைமூட்டம் அவிழ
முழங்கும் எம் மூச்சில் அசையுங்கள்.
இலக்குப் பற்றிய எம் இலட்சிய நகர்வில்
கனவு சுமக்கும் எம் கண்களுக்குள் நிறையுங்கள்.
உயிர்ப்புக்காய் உதிரும் எம் சாவில்
உச்சரிக்கும் கடைசி வரிகளில் கலவுங்கள்.

எரியும் இத் தேசத்தின் முன்
கொடுந்துயர் இருள் விரிக்க
வருவோர் யாவரும் உருகிப் போவரென
உயிர் சொரிந்து உரைத்தவரே
நெஞ்சுள் உம் நினைவு
சுமந்து நிமிர்வோம்.
நாளும் புதிதாய் இந்நீள் வழி நடப்போம்.

அம்புலி-தமிழீழம்

www.tamilarangam.net



## இனம், மொழி, சமயம், நீண்ட வரலாற்றுத் தாயகம்

# இவற்றைக் கொண்டவர்களே சர்வதேச சட்டத்தின் கீழ் "மக்கள்" என வரைவிலக்கணம் செய்யப்படுவர்

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

**உ**லகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்க விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illimois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

**Ms. யக்மன்**

**கேள்வி:** அவர்களை (Contras) ஒரு தேசிய விடுதலை இயக்கம் அல்ல என்று கூறினீர்கள். அதன்படி பொதுவாகக் கூறுமிடத்து அவர்கள் இழைத்த மீறல்களை பயங்கரவாதம் என வர்ணிக்க முடியுமா?

**சாட்சி:** என்னிடம் இது சம்பந்தமாக எந்த நடைமுறை வரைவிலக்கணமும் இல்லை. இருந்தும் எதிர்ப்படை போர்க்குற்றங்கள் இழைத்திருக்கிறது என்றும் நிக்கரகுவாவில் போர் சட்டங்களையும், போர் பற்றிய மரபுகளையும் (customs of warfare) மீறியிருக்கிறது என்றும் சொல்வேன். இது தொடர்பாக "American Journal of International Law" என்ற சஞ்சிகையில் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறேன்.

**நீதிபதி:** அதாவது ஒரு தேசிய விடுதலை இயக்கமாக இருக்க வேண்டும் இல்லை என்றால் போர்க் குற்றம் ஒன்றை இழைக்க முடியாது.

**சாட்சி:** இல்லை. கனம் நீதிபதி அவர்களே, தனிப்பட்ட மனிதர்கள் போர்க்குற்றங்களை இழைக்க முடியும். அது. . .

**நீதிபதி:** சரி, தனிப்பட்டவர்கள் குற்றங்களை இழைக்கக்கூடும். போர்க் குற்றங்களை அல்ல?

**சாட்சி:** சரி, அவர்கள் பொதுக்குற்றங்களை இழைக்கக்கூடும். தனிப்பட்டவர்கள், தனிப்பட்ட மனிதர்களும் போர்க்குற்றங்களை இழைக்கக்கூடும். ஆம்.

இது Tokyo இல் நடந்த போர்க்குற்ற வழக்குகளில் நிலைநாட்டப்பெற்றது. இங்கு தனிப்பட்ட மனிதர்கள் போர்க்குற்றங்கள் இழைத்ததற்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

Nuremberg விசாரணையின் போதும் இவ்வாறு செய்யப்பட்டது. கனம் நீதிபதி அவர்களே, I.B.Farben க்கு எதிரான வழக்கில் முக்கிய அலுவலகரும், அவருக்கு அடுத்த இரண்டாவது அலுவலகரும், போர்க்குற்றங்கள் புரிவதற்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தார்கள் என்ற அடிப்படையில் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்டார்கள்.

இந்த இருவரும் வியாபாரம் செய்யும் சாதாரண குடிமக்களாவர். இவர்கள் SS படைக்கு Zyklon B வாயுவை விற்பனை செய்தார்கள். ஆரம்பத்தில் SS படை இந்த வாயுவை பூச்சிகளை அழிப்பதற்கு உபயோகித்தார்கள். பின் அவர்கள் யூதர்களை அழிப்பதற்கு அதனை பாவிக்க முடிவு செய்தார்கள். இதனால் Zyklon B வாயுக் கொள்வனவு அதிசயிக்கத்தக்க விதத்தில் அதிகரித்தது. அவர்களும் (வியாபாரிகளும்) SS ற்கு விற்றுக் கொண்டே இருந்தார்கள். யுத்தம் முடிந்தபின் இந்த இருவரும் போர்க்குற்றங்கள் இழைத்ததற்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

அவர்கள் சொன்னார்கள் இல்லை. நாங்கள் ஒரு சாதாரண பொது வர்த்தக விற்பனைப் பொருளை விற்பனை செய்தோம். அதற்கு ஒரு நியாயமான உபயோகம் இருந்தது. அதாவது அது பூச்சிகளைக் கொல்ல உதவும் வாயுவாகும். ஆனால் வழக்குத் தொடுத்தோர் இந்த வியாபாரிகள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் SS ஒரு கால கட்டத்தில் Zyklon B யை யூதர்களைக் கொல்வதற்கு பாவித்தார்கள் என்பது இவர்ளுக்குத் தெரியும். அல்லது தெரிந்திருக்க வேண்டும் என்பதை நீதிமன்றத்தில் நிரூபித்தார்கள்.

**நீதிபதி:** ஆக நீங்கள் சொல்லிக் கொள்வது தனிப்பட்டவர்கள் போர்க் குற்றங்களை இழைக்கலாம்?

**சாட்சி:** ஆம். தனிப்பட்டவர்கள், இராணுவ சிப்பாய்கள் மட்டுமல்ல.

**நீதிபதி:** அவர்கள் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது சேராதவர்களாக இருந்தாலும்?

**சாட்சி:** அது சரி. ஆனால் சாதாரணமாக போர்க்குற்றங்களுக்காக இராணுவ சிப்பாய்கள் அல்லது ஒரு தேசிய விடுதலை இயக்க உறுப்பினர்களே விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

உங்களுக்குத் தெரியும். சாதாரணமாக தனிப்பட்டவர்கள் போர்க்குற்றங்கள் இழைக்கும்போது உள்நாட்டு குற்றச் சட்டங்களை மீறினார்கள் என்ற அடிப்படையிலேயே குற்றம் சாட்டப்படுகிறார்கள். ஆனால் சில சூழ்நிலையில் அவர்கள் போர்க் குற்றங்கள் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படலாம்.

ஐக்கிய அரசு இராணுவத்தின் கையேடு (1956) தனிப்பட்ட மனிதர்கள் போர்க்குற்றங்கள் இழைக்கக் கூடும் என்பதை துலாம்பரமாக அங்கீகரிக்கிறது.

மதிய இடைவேளைக்குப் பின் மீண்டும் நீதிமன்றம் கூடுகிறது.

**Ms. யக்மன்**

**கேள்வி:** மீண்டும் தொடருமுன், தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறப்புப் போராளிகளாக அங்கீகரிக்கப்படுவது போல வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் எவராவது இப்படியான சிறப்புப் போராளிகளாக அங்கீகரிக்கப்படாமலும் இருக்கிறார்களா? அப்படியான இயக்கங்கள் இருப்பதுபற்றி சொல்லமுடியுமா? நான் சில உதாரணங்களைச் சிந்தித்துப்பார்க்கிறேன்.

**பதில்:** நிச்சயமாக நீங்கள் ஒன்றை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டும். எந்த ஒரு குழுவும் போய் "நாங்கள் ஒரு தேசிய விடுதலை இயக்கம்" என்று மார்தட்ட முடியாது.

உதாரணத்துக்கு சொல்ல வேண்டும் என்றால் ஐக்கிய அமெரிக்காவில் எழுபதுகளில் Symbionese Liberation Army என்ற ஒரு குழு இருந்தது. இதில் மத்திய தர, மேல் தர வெள்ளையர் இருந்தார்கள். இவர்கள் ஐ. அமெரிக்காவில் காணப்படும் கொலனியாதிக்கத்தை, இனவாதத்தை, முதலாளித்துவத்தை விரும்பவில்லை. சில வைப்பவங்களை கொள்ளையடித்தார்கள். Patty Hearst என்பவரை கடத்தினார்கள்.

**யதார்த்தம் என்னவென்றால் ஒரு தேசிய விடுதலை இயக்கம் விதி 1, பந்தி 4 இல் கூறப்பட்டிருக்கும் வரைவிலக்கணத்தை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். முதலில் சுயநிர்ணய உரிமைக்கு உருத்துடைய மக்கள் இருக்க வேண்டும். அவர்களை அந்த இயக்கம் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அத்தோடு அந்த இயக்கம் கொலனி ஆதிக்கத்திற்கு எதிராக, அன்னிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக, இனவாதிக்கத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்க வேண்டும்.**

எனவே இதற்கான சோதனை கடினமானது. விதி 1 மேலதிக ஒப்பந்தம் 1.11 இவற்றை ஐக்கிய அமெரிக்க அரசு சார்பாகப் பேசி வரைவிலக்கணம் வரைய உதவியவர் Harvard Law School யை சேர்ந்த எனது ஆசிரியரும் பேராசிரியருமான Richard Baxter ஆவர்.

அப்போது அவர் துணை அமெரிக்க இராணுவத்தில் கேணலாக இருந்தவர்.

எனவே இந்த வரைவிலக்கணத்தை சுலபமாக எந்த ஒரு அமைப்பும் பூர்த்தி செய்ய முடியாது. "நாங்கள் ஒரு விடுதலை இராணுவம்" என்று சொல்லிக் கொண்டு ஜெனிவா மரபுகள், மேலதிக ஒப்பந்தங்கள் இவற்றின் பிரகாரம் நாங்கள் சர்வதேச ஆயுதமோதலில் ஈடுபட்டிருக்கும் விசேட போராளிகள் என்று சொல்ல முடியாது.

**கேள்வி:** இந்த நீதிமன்றம் பயங்கரவாதம் பற்றி நிச்சயமாக பரிசீலிக்க இருக்கிறது. காரணம் அது கனேடிய சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் இருக்கிறது என்று பாவனை செய்து கொண்டால் நாங்கள் தேசிய விடுதலை இயக்கங்களை அதனோடு சம்பந்தப்படுத்த முடியாது?

**பதில்:** ஆம், நான் தெளிவாகக் கூறியவாறு, பயங்கரவாதத்திற்கு எந்த வரைவிலக்கணத்தை வரையறை செய்தாலும் .... நான் நினைக்கவில்லை ஒரு இராணுவத்தை சார்ந்த சிப்பாய்களை பயங்கரவாதிகள் என்று வரைவிலக்கணம் செய்யலாம் என்று நான் நினைக்கவில்லை. அப்படிச் செய்தால் ஒரு நாட்டின் சொந்த இராணுவத்தில் அல்லது வேறு நாடுகளது இராணுவத்தில் உள்ள சிப்பாய்களை பயங்கரவாதிகள் என்று கருத வேண்டி வந்துவிடும். இதுபோல தேசிய விடுதலை இயக்கத்தை சார்ந்த போராளிகளும் அவ்வாறு கருதப்பட வேண்டி வந்துவிடும்.

அவர்கள் (போராளிகள்) இராணுவத்தில் இருக்கும் சிப்பாய்கள் போலவே கருதப்படுவர். சலுகைகள் மட்டுமல்ல. குறைபாடுகள், தண்டனைகள் இரு சாராருக்கும் பொதுவாக இருக்கும்.

உதாரணத்துக்கு சொல்ல வேண்டும் என்றால் போர்க் குற்றங்களுக்கு தேசிய விடுதலை இயக்கப் போராளி ஒருவருக்கு மரணதண்டனை விதிப்பதை ஜெனிவா மரபுகளும், ஒப்பந்தங்களும் தடை செய்யாது.

எனவே இங்கே நாங்கள் இலேசான சட்டங்கள் பற்றி பேசவில்லை. அல்லது குறைவான சட்டம் பற்றியும் அல்ல. ஆனால் தேசிய விடுதலை இயக்கத்தை சார்ந்த போராளி ஒருவர் பயங்கரக் கொடுமைகளை திட்டமிட்டு வேண்டுமென்றே அப்பாவி பொதுமக்களுக்கு எதிராக இழைத்தால் அவர் ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் இவற்றை மீறியதற்காக அவர் மீது வழக்குத் தொடர முடியும். அது மட்டுமல்லாது உள்நாட்டு சட்டத்தை பொறுத்து, சட்ட திட்டங்களுக்கு அமைய அவரை தூக்கில் போட முடியும்.

தொடர்ச்சி 2ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "வன்னி நோக்கிய இடப்பெயர்வு" உலக சரித்திரத்திலேயே முதல் நிகழ்வு

-தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன்.

20-11-96 இதழ் தொடர்ச்சி.......

**இ**ன்றைக்கும், இடம் இல்லை. ஆனால் இந்த வீரமரபினரைக் கொண்ட– ஒன்றேகால் இலட்சம் பேரைக்கொண்ட இந்திய இராணுவம், கடற்படை, விமானப்படை எல்லாப்படைகளின் துணையுடன் அவர்கள் ஈழத்துக்கு வந்து முக்கி முனகித் திணறி எதுவுமே செய்யமுடியாமல் அவர்களைப் பிரபாகரன் வெளியேற வைத்தபோது, உலகின் ஐந்தாவது பெரிய இராணுவத்தைப் பல களங்களில் வெற்றி குவித்த அந்த மாபெரும் இராணுவத்தைப் பிரபாகரன் எதிர்காலம் என்பது ஈழத்தின் களத்திலேதான் நிர்மாணிக்கப்படுகிறது என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள்.

களத்திலே நின்று போராடிக்கொண்டி ருக்கக் கூடியவர்கள் அங்கே பெறுகிற அந்தக் கள வெற்றிகளுக்குப் பின்புலமாக நாம்தான் இருக்க வேண்டும். நீங்கள் மட்டுமல்ல, அமெரிக்காவில் வாழ்கிற தமிழர்கள் மட்டுமல்ல, ஐரோப்பாவில் வாழ்கிற தமிழர்கள் மட்டுமல்ல, இந்தியாவில் வாழ்கிற தமிழர்கள் மட்டுமல்ல, உலகம் பூராவும் எந்த நாட்டிலே தமிழன் வாழ்ந்தாலும் அவர்கள் எல்லாம் அங்கே களத்திலே போராடிக்கொண்டிருக்கிற புலிகளுக்கு சார்பில் உங்கள் மத்தியில் நானும் வழிமொழிகிறேன். ஊங்களுக்கு உறுது ணையாக நாங்கள் என்றென்றும் இருப்போம். உங்களுடைய போராட்டம் வெற்றிபெறுகின்ற வரையிலும் அதற்குப் பின்னால் நீங்கள் நிர்மாணிக்கப்போகிற அந்த மகத்தான பணியிலும் எங்களது பங்களிப்பு சிறப்பாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழக அரசியலிலும் இந்திய அரசியலிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இந்தியாவை ஏற்பட்டிருக்கும்போது, மதிப்புக்குரிய தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதைப் பயன்படுத்திக் கொண்டு தமிழீழப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தன்னுடைய செல்வாக்கினை டில்லியிலே பயன்படுத்த வேண்டும் என்று இங்கே குழுமியிருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் சார்பிலும், எங்கள் சார்பிலும் அவருக்கு நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். நாங்கள் தமிழ் நாட்டுக்குப் போனாலும் இதைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். தமிழ் நாட்டின் அரசானாலும், டில்லி அரசானாலும் கடந்த காலத்தில் இலங்கைப் பிரச்சினையிலே கையாண்ட அணுகுமுறைகள் தவறானவை. அந்த அணுகுமுறைகளை நீங்கள் தொடர்ந்து கையாளக்கூடாது. அவ்வாறு கையாள்வது 8 கோடி தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை என்பதை நாம் நிச்சயமாக வலியுறுத்துவோம்.

இந்திய இராணுவம் அங்கே இழைத்த கொடுமைகளையெல்லாம் கிராமம் கிராமமாக நான் பார்த்தறிவதற்கு அருமைத்தம்பி பிரபாகரன் அவர்கள் உதவி செய்தார்கள். அவர்களின் உதவ–யின் பேரிலே எல்லா இடங்களுக்கும் சென்று பார்த்துவிட்டு டில்லிக்குப் போய் வி. பி. சிங் அவர்களையும் சந்தித்து ஐ. கே. குஜரால் அவர்களையும் சந்தித்து நான் ஒரு அறிக்கை சமர்ப்பித்தேன். இந்திய இராணுவத்தை நீங்கள் வாபஸ் பெற்றால் மட்டும் போதாது, இந்திய இராணுவம் அங்கு செய்திருக்கக்கூடிய அழிவுகளுக்கு நீங்கள் ஈடுகட்ட வேண்டும். அந்த அழிவுகளை இந்திய இராணுவம் செய்ததற்கு யார் காரணமோ அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய இராணுவத்தினாலே இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், வீடுகள் அவற்றைப் புதுப்பித்து அந்த மக்கள் அமைப்பதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று அன்றைக்கு வற்புறுத்தினேன். ஆனால், எதிர்பாராத விதமாக அவர்கள் ஆட்சி விரைவிலே முடிவிற்கு வந்து விட்டது. ஆகவே அந்தக் காரியத்தை அவர்கள் தொடரமுடியவில்லை.

அதே ஐ.கே. குஜரால் அவர்கள் மீண்டும் இந்த அமைச்சரவையிலே வெளிநாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார். அவருக்கு இந்தப் பிரச்சினைபற்றி முழுமையாகத் தெரியும். ஆகவே ஐ.கே. குஜரால் அவர்களுக்கும் அவர்கள் மூலமாகப் பிரதமர் தேவகவுடா அவர்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். தயவு செய்து முந்திய ஆட்சி செய்த தவறுகளை நீங்கள் தொடராதீர்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். சிங்களப் பேரினவாதத்திற்குத் தயவுசெய்து துணைபோகாதீர்கள். கடந்த ஆட்சி, முட்டாள் தனமான ஒரு அணுகு முறையைக் கையாண்டு அதைச் செய்தது. அதை நீங்கள் தொடரக்கூடாது என்பதை நான் இங்கே வலியு றுத்துவதைப் போல, அங்கே தமிழ்

தற்கொடைப்படையிலே சேரும் பொழுது இன்றைக்கு இத்தனை மணிக்கு நமக்குச் சாவு என்று தெரிந்துதான் ஒவ்வொரு கரும்புலியும் அடியெடுத்து வைக்கிறான். சாவு எப்போது என்பது தெரிந்தவுடனேயே, மனிதர்கள் சுபாவம் என்பது, அவர்கள் அதை நினைத்தே மயங்குவார்கள். அதை நினைத்தே ஏங்குவார்கள். அதை நினைத்தே அச்சமடைவார்கள். ஆனால், இந்த அரும்புகள், மலர்ந்து மணம் வீசவேண்டிய இந்த மலர்கள், இத்தனையாம் திகதி இத்தனை மணிக்குத் தாக்குதலை நடத்தி, காற்றுடனேயே கலந்துபோக வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு. அவர்கள் தங்களையே இந்த மக்களுக்காக அர்ப்பணிக்கிறார்கள். அது எவ்வளவு மகத்தான காரியம் என்பதை நம்மால் எண்ணிக்கூடப் பார்க்க முடியாது.

வெளியேற்றியபோது உலகம் ஒரு உண்மையை உணர்ந்தது.

அந்த உண்மை என்னவென்றால், வீரமரபினரை இந்தப் புலிகள் தோற்க டித்திருக்கிறார்கள் என்று சொன்னால், இவர்கள் உண்மையிலேயே பெரிய வீரமரபினராகத்தான் இருக்க வேண்டும் என்று உங்களுடைய தியாகத்தின் விளைவாக புலிகளின் தியாகத்தின் விளைவாக உலகம் பூராக வாழும் தமிழர்கள் வீரமரபைச் சேர்ந்தவர்கள், புறநானூற்றுப் பரம்பரைதான் என்று அன்றைக்கு நிலைநாட்டப்பட்டது. அத னால்தான், உலகம் பூராவும் வாழுகின்ற தமிழர்கள் எந்த நாட்டிலே வாழ்ந்தாலும், இன்றைக்குத் தமிழி னத்துக்கு ஒரு புதிய மரியாதையை ஒரு புதிய பெருமையை ஒரு புதிய உயர்வை அருமையான தியாகத்தின் மூலம் அவர்களுடைய வீரத்தின் மூலம், இன்றைக்கு விடுதலைப் புலிகள் நிலை நாட்டியிருக்கும் போது அவர்களுக்கு எல்லாவிதத்திலும் பக்கத்து ணையாக இருக்க வேண்டியது உலகம் பூராவும் வாழ்கின்ற தமிழர்களின் மகத்தான கடமை என்பதை நான் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன்.

**இன்றைக்கு** உலகில் எத்தனையோ நாடுகளிலே தமிழர்கள் வாழ்கிறார்கள். 40 நாடுகளுக்கு மேலே வாழ்கிறார்கள். 8 கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். அண்மைக்காலத்தில் உலகம் பூராவிலும் இன்றைக்கு ஒரு மகத்தான விழிப்புணர்ச்சி, ஒரு மகத்தான எழுச்சி, தமிழ்த் தேசிய உணர்வு பொங்கிப் பரவகித்து ஓடுகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம், பிரபாகரன் அவர்களின் தலைமையிலே நடைபெற்றுக்கொண்டி ருக்கும் வீரம் செறிந்த போராட்டமாகும் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. கனடா வாழ் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சொந்த மண்ணிலே வாழ்வதற்கு வழியில்லாமல் இங்கே வந்து வாழ்ந்தாலும்கூட, அதை மறவாது களத்திலே இறங்கிப் போராடும் புலிகளுக்குத் துணையாக இருப்பது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பாராட்டுகிறேன். ஊங்களுடைய இந்தத் தொண்டுள்ளம் தொடர வேண்டும். நம்முடைய நாம்தான் பின்புலம். நம்முடைய ஒவ்வொரு உதவியும் அவர்களைக் களத்திலே மேலும் மேலும் முன்னேறிச் செல்ல வைக்கும். மேலும் மேலும் பல வெற்றிகளைக் குவிக்க வைக்கும் என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். இங்கே உலகத் தமிழர் இயக்கத் தலைவர் இன்பம் அவர்கள் பேசும்போது. அவசரக் காலப் போர் நிதி உதவியைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னார். அதை நான் உங்கள் மத்தியிலே வலியுறுத்த விரும்புகிறேன். அதை நீங்கள் செய்ய வேண்டும். அதை நீங்கள் உங்களுடைய முக்கியமான கடமையாகக் கருதி அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகிறேன்.

இதே நேரம், எங்களுடைய தமிழ்நாட்டைப் பற்றியும் நான் உங்களுக்குச் சொல்லவேண்டும். டாக்டர் ராமதாஸ் அவர்கள் நிறுவிய பாட்டாளி மக்கள் கட்சி, அதன் தலைவர் பேராசிரியர் தீரன் அவர்கள் அந்தக் கட்சியிலே இருக்கும் இலட்சக்கணக்கான தொண்டர்கள் ஆண்டுவந்த காங்கிரஸ் கட்சி ஆட்சிப்பொறுப்பில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். 13 கட்சிகளைக் கொண்ட ஐக்கிய முன்னணி ஆட்சி அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதிலே முக்கியமாக மாநிலக் கட்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. மாநிலக் கட்சிகளின் துணையில்லாமல் இனிமேல் டெல்கியிலே யாரும் ஆட்சிப் பீடத்தில் அமர முடியாது என்ற நிலைமை அங்கே ஏற்பட்டி ருக்கிறது. அதேபோல, தமிழகத்திலே திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றி பெற்று ஆட்சிப் பீடத்திலே அமர்ந்தி ருக்கிறது. முதலமைச்சராக மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். இந்தக் காலகட்டத்தில் நானாலும், எங்களுடைய இயக்கமானாலும், டாக்டர் ராமதாஸ் அவர்களானாலும், அவர்களுடைய இயக்கமானாலும் அல்லது எங்களைப் போன்ற தமிழீழத்திற்கு ஆதரவாயிருக்கிற அமைப்புகள், கட்சிகள் அத்தனையானாலும் நாங்கள் ஒன்றுபட்டு நின்று தமிழக அரசையும், இந்திய அரசையும் வற்புறுத்துவோம்.

தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டி ருக்கின்ற 39 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவில்லாமல் டில்லியில் தொடர்ந்து தேவகவுடா பிர–தமராக இருக்க முடியாது. இதுவரை இல்லாத அளவுக்கு 8 தமிழர்கள் டில்லியிலே தேவகவுடாவின் அமைச்சர வையிலே அமைச்சர்களாகப் பொறு ப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். 8 தமிழர்கள் டில்லியிலே அமைச்சர்களாக இருக்கும்போது, நம்முடைய 39 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதர வில்லாமல் ஒரு ஆட்சி இயங்க முடியாது என்ற நிலைமை டில்லியிலே

> உலகம் பூராவும் வாழுகின்ற தமிழர்கள் எந்த நாட்டிலே வாழ்ந்தாலும், இன்றைக்குத் தமிழினத்துக்கு ஒரு புதிய மரியாதை-தயை ஒரு புதிய பெருமையை ஒரு புதிய உயர்வை அருமையான தியாகத்தின் மூலம் அவர்களுடைய வீரத்தின் மூலம், இன்றைக்கு விடுதலைப் புலிகள் நிலைநாட்டியிருக்கும் போது அவர்களுக்கு எல்லாவிதத்திலும் பக்கத்துணையாக இருக்க வேண்டியது உலகம் பூராவும் வாழ்கின்ற தமிழர்களின் மகத்தான கடமை என்பதை நான் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன்.

அதைப் போல் எங்கள் இயக்கம், சகோதரர் வீரமணி தலைமையில் இயங்கும் திராவ–டர் கழகம் இன்னும் பல்வேறு இயக்கங்கள் உங்களுக்கு உறுது ணையாக உங்களுக்கு ஆதரவாக குரல்கொடுத்து வருகின்றன. எத்தனையோ அடக்குமுறைகளுக்கு நடுவே எத்த னையோ இடையூறுகளுக்கு நடுவேயும் அந்தக் கடமையை நாங்கள் தொடர்ந்து செய்துவருகின்றோம். இனியும் தொடர்ந்து செய்து வருவோம் என்பதையும், அவர்கள் இங்கே தமிழ் நாட்டு மக்களின்

தொடர்ச்சி 14ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேச்சிற்கு முரணான அரசின் செயல்

விமானப் படைக்கும் கடற்படைக்குமெனப் பெரும் அளவினதான போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா அரசு இறங்கியுள்ளது. இதில் நவீன போர் விமானங்கள், கடற்படை போர்க் கப்பல்கள் என்பன முதன்மையானவையாக இருப்பதாக இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருபுறம் சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவும், இராணுவத்தளபதி லெப். கேணல் ரோகான் தளுவத்தவும், போர் விரைவில் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுவிடும் என்றும் புலிகள் நகரங்களில் இருந்து விரட்டப்பட்டு விட்டார்கள் – போராடும் சக்தியை இழந்து விட்டார்கள் எனவும் பேசி வருகின்றார்கள்.

நகர் கைப்பற்றப்பட்டதையும், கிளிநொச்சி நகர் கைப்பற்றப்பட்டதையும் ஆதாரமாகக்கொண்டு பிரசாரம் செய்கின்றனர்.

ஆனால், மறுபுறமோ பெரும் அளவினதான போர்த் தளபாடங்களை வாங்கிக் குவிக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது. தற்பொழுது கிடைக்கும் தகவல்களின்படி பார்த்தால், சிறிலங்கா வான்படையும், கடற்படையும் தற்பொழுதுள்ள ஆயுதத் தளபாட பலத்தை இரட்டிப்பாக்கும் அளவினதான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. இதில் சில இராணுவத் தளபாடங்கள் முன்னையதை விட நவீனப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

**புலிகள் போராடும் சக்தியை இழந்து விட்டார்கள், போர் விரைவில் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுவிடும் என ரத்வத்தவும், தளுவத்தவும் கூக்குரலிடுகின்றனர். அப்படியாயின் எதற்கு படைக்கு ஆட்திரட்டல்களும் ஆயுதக் கொள்வனவுகளும்?**

மறுபுறம், சந்திரிகா அம்மையாரோ இவ் ஆண்டிற்கு மட்டுமல்ல, அடுத்த ஆண்டிற்குமான ஆயுதத் தளபா–டங்கள் கொள்வளவு செய்யப்பட்டுவிட்டன. ஆகையினால், போதிய தளபாடங்கள் இராணுவத்திடம் உண்டு அடுத்த ஆண்டில் இராணுவச் செலவீட்டிற்கான நிதிகுறைக்கப்படும் என அண்மையில் பேசியிருந்தார்.

இவ்வாறாகச் சிறிலங்கா அரசின் தலைமையும், இராணுவத் தலைமையும் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டார்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். இதற்கு யாழ்

அத்தோடு இராணுவத்திற்கென ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளிலும் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இம்முயற்சியில் சந்திரிகா அம்மையார் கூட பெரும் அக்கறை காட்டுவதாகத் தெரிகின்றது. சிறிலங்கா இராணுவத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவு தின வைபவத்தில் கலந்து கொண்ட சந்திரிகா அம்மையார் புதிதாக இராணுவத்தினரைத் திரட்டும் முயற்சியைத் தொடக்கி வைத்தமை இதற்குச் சிறப்பான உதாரணமாகும்.

இவ்வாறாக, ஒருபுறம் இராணுவ வெற்றிகள் குறித்து அரசு கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கையில் – மறுபுறம் பெரும் நிதி ஒதுக்கீடும், இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு, ஆயுதத் தளபாடக் கொள்வனவு என்பன நடைபெறுவதும் ஏன்? இறுதிக் கட்டத்தை அடையும் போரிற்கு இவ்வாறான பெரும் தொகை ஆளணியும், ஆயுதத்தளபாடங்களும் ஏன்?

இங்கு தான் உண்மை தவிர்க்க முடியாது வெளிவர வேண்டியுள்ளது. அதாவது, இராணுவம் யாழ் நகரைக் கைப்பற்றி இருப்பினும், கிளிநொச்சி நகரை ஆக்கிரமித்திருப்பினும் போர் இன்னமும் ஓயவில்லை – முடிவுக்கு வரவில்லை என்பதே அதுவாகும். சுருக்கமாகக் கூறுவதானால், போர் முனையில் இராணுவத்தினரின் கை ஓங்கிவிட்டதாக இல்லை என்பதும் புலிகள் தமது தாக்குதல் திறனை இழக்கவில்லை என்பதே ஆகும்.

போர் முனையில் இராணுவத்தினரின் கை ஓங்கியிருப்பின் இவ்வாறான ஆட்சேர்ப்பு, ஆயுதக் குவிப்பு நடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருக்க வேண்டிய அவசியம் உருவாகி இருக்கமாட்டாது என்பது மட்டுமல்ல, சர்வதேச ரீதியாக புலிகளுக்கு எதிராகப் பெரும் பிரசாரத்திலும் அரசு முனைப்பாக இறங்கியிருக்க வேண்டிய தேவை எழுந்திருக்கமாட்டாது. அதாவது, ஏதோ ஒரு வகையில் பிரச்சினையை சர்வதேச மயமாக்க வேண்டிய தேவை அரசிற்கு எழுந்திருக்கமாட்டாது.

இந்நிலையானது, சந்திரிகா அரசின் பேச்சிற்கும் – செயற்பாட்டிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டையும், வடக்கு–கிழக்குப் போர் முனையின் கள நிலைவரத்தையும் வெளிக்காட்டுவதற்கு சிறப்பான ஒரு எடுத்துக்காட்டாகும். அதாவது, களநிலை அரசு கூறுவது போன்று அரசிற்கு சாதகமாக இல்லை என்பதும், போர் முடிவடைவதற்கான சூழ்நிலை தற்போதைக்கு இல்லை என்பதுமே தெளிவான விடயங்களாகும். ✷

# வன்னி நோக்கிய இடப்பெயர்வு...

நாட்டிலும் நாங்கள் சென்று வலியுறுத்துவோம்.

நாங்கள் ஒன்றுபட்டு அங்கே செயற்பட்டு. இந்தப் பிரச்சினைகளுக்கு டாக்டர் ராமதாஸ் அவர்கள் சொன்னது போல, உறைந்து போயிருக்கிற நயாகரா அருவிக்குச் சூடாக்குகிற அந்த வேலையைக் கட்டாயம் நாங்கள் செய்வோம். இது நீங்கள் சொல்லித்தான் நாங்கள் செய்யவேண்டுமென்பதில்லை. எங்கள் உள்ளத்திலே ஊறிப்போயிருக்கிற ஒரு உணர்வைத்தான் அவர்கள் இங்கு வெளிப்படுத்தினார்கள். உங்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக நாங்கள் இதைச் சொல்லவில்லை. எங்களுடைய கடமை என்ற காரணத்தினால் நான் இதைச் சொல்லுகிறேன். அதைத் தொடர்ந்து செய்வோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவ–ித்துக் கொள்கிறேன். தமிழீழத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மகத்தான விடுதலைப் போராட்டத்தை, தம்பி பிரபாகரன் தலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விடுதலைப் போராட்டத்தை ஏதோ தமிழீழத்தை அமைப்பதற்கான போராட்டமாக மட்டும் யாரும் பார்க்கக் கூடாது: உலகம் பூராவும் வாழுகிற 8 கோடி தமிழருக்கு விடிவைக் கொண்டுவரப் போகிற போராட்டத்தின் முதற் கட்டம் இந்தப் போராட்டமே என்ற கோணத்தில் இதைப் பார்க்க வேண்டும் என்று நான் பணிவாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

நான், மதிப்புக்குரிய கலைஞர் அவர்களுக்கு இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். அவருக்கு முன்னாலே, தமிழ் நாட்டிலே பலபேர் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். ஆனால் இதற்கு முன்னாலே முதலமைச்சராக இருந்தவர்களுக்கும், பின்னாலே இருக்கப்போகிறவர்களுக்கும் கிடைக்காத ஒரு மாபெரும் வாய்ப்பு மதிப்பிற்குரிய முதல்வர் கலைஞர் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இவர் காலத்திலேதான் தமிழீழ மக்கள் விடுதலை பெறுவதற்காகப் போராடினார்கள். இதற்கு முன்னாலே பல பெரிய தலைவர்களெல்லாம் முதலமைச்சர்களாக இருந்த பொழுது, அவர்கள் காலத்திலே தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறவில்லை. இவருக்குப் பின்னாலே முதலமைச்சர்களாக பலபேர் வரக்கூடும். அவர்கள் காலத்திற்குள்ளாகவே இந்தப் போராட்டம் முடிந்துவிடலாம்.

ஆகவே மதிப்புக்குரிய கலைஞர் அவர்களே! உங்கள் காலத்திலே, நடைபெறுகிற இந்தப் போராட்டம் வெற்றிபெறுவதற்கு நீங்கள் உறுதுணையாக இருந்தீர்களென்பதுதான், எதிர்காலத் தமிழர் வரலாற்றிலே உங்களுக்குப் பொன்னான இடத்தைப் பொறித்துத் தரும். முதலமைச்சராக இருந்தால் மட்டும் வரலாற்றிலே சிறப்பான இடம் கிடைக்காது. ஏனென்றால் பலபேர் இருந்திருக்கிறார்கள். பலபேர் எதிர்காலத்தில் இருக்கப்போகிறார்கள். உங்கள் காலத்திலே நடைபெறுகிற இந்த மகத்தான விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு நீங்கள் எல்லா வகையிலும் உறுதுணையாக இருக்க வேண்டும். உங்கள் செல்வாக்கை டில்லியிலே பயன்படுத்த வேண்டும். எட்டுத் தமிழமைச்சர்களும் டில்லி அமைச்சரவைக் கூட்டம் நடக்கும் பொழுது, அதிலே உறுதியாக இந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டும். 39 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதை இங்கே வலியுறுத்த வேண்டும். அவர்கள் செய்வார்களானால், களத்திலே போராடிக்கொண்டிருக்கும் நம்முடைய தம்பிகளுக்கு, இராசதந்திரக் களத்திலே வெற்றி பெறுவது சுலபமாகிவிடும். அதை அவர் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக இங்கே ஒரு நல்ல நூலை, தமிழ் மக்களால் காலம் காலமாக வைத்துப் போற்றக்கூடிய ஒரு நூலை நான் இங்கு வெளியிடுவதிலே மகிழ்ச்சி அடைகிறேன். பிரபாகரன் அவர்களின் சாதனையிலே முக்கியமான சாதனை, தன்னைத் தானே தியாகம் செய்து கொள்ளும் கரும்புலிகளை உருவாக்கியமை. விடுதலைப் புலிகள் இயக்கத்திலே நம்முடைய இளைஞர்களும் யுவதிகளும் சேர்வது என்று முடிவெடுத்து, தங்களுடைய குடும்பத்தை விட்டு வீட்டை விட்டு, வெளியே அடியெடுத்து வைக்கும்போதே அவர்களுக்குத் தெரியும், நாம் நிச்சயமாக மரணபுரியை நோக்கித்தான் பயணமாகிறோமென்று. நாம் சாவை நோக்கித் தான் போகிறோமென்று. இன்றைக்கும் சாகலாம், நாளைக்கும் சாகலாம், அடுத்த நாள் சாகலாம். இல்லாவிட்டாலும் என்றைக்கோ ஒருநாள் களத்திலே எதிரியுடன் போராடிச் சாகத்தான் போகிறோம் என்பது விடுதலைப் புலிகளுக்குத் தெரிந்துதான் அந்த இயக்கத்திலே அவர்கள் சேர்கிறார்கள்.

ஆனால், கரும்புலிகளின் நிலை முற்றிலும் மாறானது. அவர்கள் நிலை முற்றிலும் வேறுபட்டது. இயக்கத்திலே சேர்கிற இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் என்றாவது சாவு நிச்சயம் என்பது தெரியும். ஆனால், இந்தத் தற்கொடைப்படையிலே சேரும் பொழுது இன்றைக்கு இத்தனை மணிக்கு நமக்குச் சாவு என்று தெரிந்துதான் ஒவ்வொரு கரும்புலியும் அடியெடுத்து வைக்கிறான். சாவு எப்போது என்பது தெரிந்தவுடனேயே, மனிதர்கள் சுபாவம் என்பது, அவர்கள் அதை நினைத்தே மயங்குவார்கள். அதை நினைத்தே ஏங்குவார்கள். அதை நினைத்தே அச்சமடைவார்கள். ஆனால், இந்த அரும்புகள், மலர்ந்து மணம் வீசவேண்டிய இந்த மலர்கள், இத்தனையாம் திகதி இத்தனை மணிக்குத் தாக்குதலை நடத்தி, காற்றுடனேயே கலந்துபோக வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு. அவர்கள் தங்களையே இந்த மக்களுக்காக அர்ப்பணிக்கிறார்கள். அது எவ்வளவு மகத்தான காரியம் என்பதை நம்மால் எண்ணிக்கூடப் பார்க்க முடியாது.

அத்தகைய ஒரு மகத்தான செயலை ஆற்றிவருகிற நம்முடைய கரும்புலிகள், உயிரை ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்ற காரணத்தினாலே உயிராயுதம் என்ற பெயரிலே ஒரு அற்புதமான நூல் இங்கே உலகத்தமிழர் இயக்கத்தினாலே உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நூலை வெளியிடக்கூடிய மகத்தான பேறு எனக்கு அளிக்கப்பட்டதற்காக நான் உண்மையிலேயே பெருமை அடைகிறேன். ஒவ்வொரு தமிழனும் குறிப்பாக ஒவ்வொரு இளைஞனும், ஒவ்வொரு யுவதியும் இந்த நூலைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். அதன் மூலமாக அவர்கள் புத்துணர்வைப் பெறவேண்டும் என்று வேண்டிக்கொண்டு இந்த நூலை நான் இப்போது வெளியிடுகிறேன்.

இறுதியாக, நான் முதலில் விடுத்த வேண்டுகோளை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கே வாழுகின்ற புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கள் மண் விடுதலை பெறவேண்டும் என்ற ஏக்க உணர்வோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இந்த நாட்டின் அமைதியைக் குலைப்பதற்காக அவர்கள் இங்கே வரவில்லை. இந்த உண்மையைக் கனடா அரசாங்கம் உணரவேண்டும். அந்த உணர்வின் அடிப்படையிலே உலகத் தமிழர் இயக்கத்தின் பொறுப்பாளர் அருமைத்தம்பி சுரேஸ் அவர்களை இந்த அரசு விடுதலை செய்வதற்கு முன்வரவேண்டும் என்று அனைத்துத் தமிழ் மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுத்து, இந்த வாய்ப்பினை அளித்த உலகத் தமிழர் இயக்கத்திற்கும், இங்கே பெருந்திரளாக இன்று குழுமியிருக்கும் என் உயிரினுமினிய அருமைச் சகோதர சகோதரிகளுக்கும் என் இதயபூர்வமான நன்றியைக் கூறி உங்கள் மத்தியிலிருந்து விடைபெறுகிறேன்.

**வணக்கம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்




## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஒன்பது

(தொடர்ச்சி)

"நீ மறுத்திருந்தால் என்ன நடந்திருக்கும்?"

"ஓ அவர்கள் ஐரோப்பாவிலிருந்து இன்னோர் நிருபரை இங்கு வரவழைத்திருக்கலாம். அவர்கள் மிகவும் புத்திசாலிகள். நான் இங்கே வசதியாக நிற்கிறேன் அதுதான்."

"மார்க், நான் முட்டாள்தனமாக நடந்து கொண்டேனா?" சிந்தனையுடன் கேட்டாள்.

"வேறு பெண்கள் நடந்து கொள்வதற்கு மேலாக முட்டாள்தனமாக நீ நடந்து கொள்ளவில்லை." அரியிடம் அவளுக்கு ஏற்பட்ட கவர்ச்சி வெளித் தெரிந்ததை உணர்த்துவது போல் வேண்டுமென்றே அவன் சொன்னான்.

"அவன் ஒரு கிளுகிளுப்பூட்டும் மனிதன். எப்போது அவனை முதலில் சந்தித்தாய்?"

"1939இன் முற்பகுதிகளில் பேர்லினில் முதல்தரம் சந்தித்தேன். அப்போது எனது முதல் அமெரிக்கன் நியூஸ் சின்டிக்கேட்டுடனான பணிக்காக அங்கு சென்றிருந்தேன். போர் தொடங்க முதல் முடிந்தளவு யூதர்களை ஜெர்மனியிலிருந்து வெளியேற்றும் பணிக்காக அங்கு மொசாட்டினால் அனுப்பப்பட்டிருந்தான். அப்போது தன் முன்னிருபதுகளில் அவன் இருந்தான். நான் திரும்பவும் அவனைப் பலஸ்தீனத்தில் சந்தித்தேன். அப்போது பிரிட்டிஷ் இராணுவத்தில் இருந்தான். அது போர் நடந்து கொண்டிருந்தபோது. அது ஒரு ரகசியமான வேலைத்திட்டத்திற்காக, எனக்கு நிச்சயமாக இதுதான் என்று தெரியாது. போரின் பின் ஐரோப்பா முழுவதிலும் அவன் காணப்பட்டான். ஆயுதங்களை வாங்குவதிலும், பலஸ்தீனத்துக்குள் அகதிகளைக் கடத்துவதிலும் ஈடுபட்டிருந்தான்."

"அவன், அவனது இந்த விநோதமான திட்டத்தில் வெற்றி பெறுவான் என்று நினைக்கிறாயா?"

"அவன் ஒரு புத்திசாலியான மனிதன்."

"ஒன்று மட்டும் சொல்லாம். இந்தப் பென்கானான் நான் சந்தித்த மற்ற யூதர்களைப் போல் நடந்து கொள்ளவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்று விளங்குகிறதுதானே? இவனுடையதைப் போன்ற ஸ்தானங்களிலே போராளிகளாகவோ அல்லது அதைப் போன்றவற்றிலோ அவர்களைக் கற்பனை செய்து பார்க்க முடியாது."

"நீ எப்படி அவர்களைப் பற்றி நினைக்கிறாய் கிற்றி? பழைய...... 'இன்டியானா' முறைப்படி, ஒரு நல்ல யூதப் பையனான மோரி – ஒரு நல்ல யூதப்பெண்ணான சாடியை மணந்து"

"காணும் நிறுத்து மார்க்" கிற்றி இடைமறித்தாள். "நான் நிறைய யூத வைத்தியர்களோடு வேலை செய்ததிலிருந்து, அவர்கள் மிகவும் கர்வமும், ஆக்கிரமிப்புக் குணமும் கொண்டவர்கள். எங்களை அவர்கள், இழிவாகவே பார்ப்பார்கள்."

"என்னத்தோடு பார்ப்பார்கள். ஒரு தாழ்வு மனப்பான்மையுடனா?"

"நீ ஜேர்மனியைப் பற்றிக் கதைத்தால் நான் ஏற்றுக்கொள்ளக்கூடும்."

"நீ என்ன சொல்ல முயற்சிக்கிறாய் கிற்றி. நாங்கள் கலப்பில்லாதவர்கள் என்றா?"

"அந்தக் கோணத்தில் பார்த்தால் எந்த அமெரிக்க யூதனும், ஒரு நிக்ரோ (Negro) – கறுப்பின மக்களுடையதோ அல்லது ஒரு மெக்சிக்கனுடையதோ வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ள முன்வர மாட்டான்."

நான் சொல்லுவது என்னவென்றால், ஒரு மனிதனைப் பிளந்து அவன் உள்ளாந்தரங்களைக் காண வேண்டியதில்லை. அமெரிக்க யூதர்கள், நல்ல நிலையில் சீவிப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உன்னுடைய சிந்தனை முயற்சி இதுவரைக்கும் நடந்ததுபோதும். அவர்களை இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பலிக்கடாவாக்கியது போதும். நீ ஏன் இதைப் பென்கானானுடன் விவாதிக்கலாமே. அவனுக்குத்தான் உன்னை என்ன மாதிரி கையாளுவது என்று தெரியும். கிற்றி கோபத்துடன் கட்டிலில் இருந்து பாய்ந்து எழும்பினாள். ஆயினும், இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது. அவர்கள் மார்க்கும் கிற்றியுமாதலால் கோபப்பட முடியாது.

"மொசாட் அலியா பெற் என்பது துல்லியமாக என்ன?"

"அலியா (Aliyah) என்ற சொல்லின் கருத்து எழும்புதல், மேலே போதல், மேலெழுதல். ஒரு யூதன் பலஸ்தீனத்துக்குச் செல்வது அலியா என்று சொல்லப்படும். அதாவது, அவன் இருந்த நிலையிலிருந்து மேலான நிலைக்குச் செல்லுதல் என்ற கருத்தில் இது சொல்லப்படுகிறது. அலெப் (Aleph) அல்லது A என்ற எழுத்து சட்டபூர்வமான குடிபெயர்தலைக் குறிக்கும். பெற் (Bet) அல்லது B சட்டவிரோதமான குடிபெயர்தலைக் குறிக்கும். ஆகவே, மொசாட். அலியா பெற் என்பது, சட்டபூர்வமற்ற குடிபெயர்தலுக்கான அமைப்பு (Organization of illegal immigration) என்பதைக் குறிக்கும்.

கிற்றி புன்னகையுடன், "என்னுடைய கடவுளே, எபிரேயம் எவ்வளவு தர்க்கரீதியான மொழி".

அரி பென்கானான் வந்து சென்றபின் கடந்து சென்ற இருநாட்களும் கிற்றியை மிகவும் அமைதியற்றவளாகவும், குழப்பமானவளாகவும் செய்தன. அந்தப் பிரமாண்டமான பலஸ்தீனியனை மீண்டும் காண விரும்பினாள். மார்க்குக்கு கிற்றியின் அவலத் தன்மை புரிந்திருந்தாலும், அரி பென்கானான் என்று ஒருவன் அங்கே வரவே வராததுபோல் தன் வேலைகளைக் கவனித்து வந்தான். அவள் தன்னைக் குழப்புவது எது என்று தீர்மானிக்க முடியாமல் குழம்பினாள். நிச்சயமாக

**லியோன் யூரிஸ்**

பென்கானானின் வரவு ஒரு பலமான முத்திரையை அவளில் பதித்திருந்தது. பென்கானானுக்கு நன்கு தெரிந்த அமெரிக்க மனச்சாட்சி தன்னைக் குழப்புகிறதா? அல்லது யூத எதிர்ப்பு வார்த்தைக்கட்காக மனம் வருந்துகிறாளா?

சிறிது வழக்கமில்லாத முறையில் சாதாரணமாக அடுத்து எப்போ மார்க், அரியைச் சந்திக்கப்போகிறான் என்று கேட்பாள், அல்லது பாமா குஸ்ராவுக்கு சுற்றிப் பார்க்கப் போய்வருவோம் என்று ஒரு பொருத்தமில்லாத விருப்பத்தைத் தெரிவிப்பாள், அல்லது தன்னோடு கோபமுற்று அரியைப் பற்றிய நினைவுகளைத் தன் மனதிலிருந்து அகற்ற முடிவு செய்வாள். மூன்றாவது நாளிரவு தன் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடக்கும் ஓசையை நடு இணைப்புக் கதவு மூலம் மார்க் கேட்கக்கூடியதாகவிருந்தது.

மிகுதியாகப் பஞ்சடைக்கப்பட்டிருந்த ஒரு கதிரையில் இருளில் இருந்தபடி, ஒரு சிகரெட்டை ஊதித்தள்ளியபடியே, முழுப் பிரச்சினையைப் பற்றியும் ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டுமென முடிவு செய்தாள்.

அவள் தன்னுடைய விருப்பத்துக்கு மாறாக, பென்கானானின் விசித்திர உலகினுள் இழுக்கப்படுவதை விரும்பவில்லை. இது வரை அவள் நிதானமான கணிப்பின் அடிப்படையிலான வாழ்க்கையை வாழ்ந்துவந்தாள். "கிற்றி எவ்வளவு புத்திசாலி" என்றுதான் அவளைப்பற்றி எல்லோரும் சொல்வார்கள்.

அவள் ரொம் பிறமென்றறை விரும்பி அவனைக் கவர முயற்சி செய்ததெல்லாம் ஒரு நன்றாக சிந்தனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்ட செயற்பாடுதான். அவள் ஒரு உணர்ச்சிபூர்வமான வீட்டை, உணர்ச்சிபூர்வமான அறிவுள்ள வரவு செலவுக்கமைய நடாத்தினாள். அவள் சாண்ட்ராவை இளவேனிற்காலத்தில் திட்டமிட்டுப் பிரசவித்தாள். அதுகூட ஒரு அறிவுபூர்வமான முடிவாகவே இருந்தது. அவள் கணநேர முடிவுகளைத் தள்ளிவிட்டுத் திட்டமிட்ட முடிவுகளையே எடுத்து வந்தாள்.

> "ஒரு மனிதனின் வாழ்நாளில் தான் வாழ்வதற்காக தன் மனம் வெறுக்கும் எவ்வளவோ காரியங்களை செய்கின்றான். அவமானம், சித்திரவதை, மரணத்திற்குக்கூடப் பயப்படாமல் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் உலகின் இந்த சிறிய தொகை மனிதர்கள்..."

இந்தக் கடந்த இரண்டு நாட்களும் ஏன் அப்படிக் கழிந்தன என்பது பற்றி அவளுக்கு விளங்கவில்லை. ஒரு விந்தையான மனிதன் திடீரென எங்கிருந்தோ தோன்றி, இன்னும் விநோதமான கதையொன்றை அவளுக்குச் சொன்னான். பரிகாசம் பண்ணும் விதத்தில், அவள் மனதைத் துருவி ஆராயக்கூடிய கண்களைக் கொண்ட அரி பென்கானானின் இறுக்கமான முகத்தை அவள் நினைத்துப் பார்த்தாள். நடனமாடும்போது அவன் கைகளிலிருந்து பாய்ந்தோடிய உணர்வலைகள் நினைவுக்கு வந்தன.

இவை எல்லாவற்றிலும் ஒரு தர்க்க ரீதியான காரியமிருக்கவில்லை. ஏனெனில் ஒரு வகையில் கிற்றி யூதர்களின் அருகில் சங்கடத்தோடு தானிருப்பாள். அதை அவள் மார்க்கிடம் ஒப்புக் கொண்டேயிருந்தாள். ஆனால் இந்த எண்ணம் ஏன் அவளில் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது அவளுக்கே புரியவில்லை.

கடைசியாக இன்னொருமுறை அரியைக் காண்பதோடு, கராஒலொஸ் முகாம்களையும் பார்த்தாலொழிய அமைதி கிட்டாதென்று முடிவெடுத்தாள். அவள் இன்னொரு முறை அரியைக் காண்பதன் மூலம், தான் புரிந்து கொள்ள முடியாதெதிலும் ஆழமாக இறங்கவில்லையெனவும், ஒரு தற்காலிக குறுகிய திடீர் பிரமையினால் அதிர்வுக்குள்ளாகியதையும் நிச்சயித்துக் கொள்ள வேண்டும் என முடிவு செய்து கொண்டாள். அவள் அரி பென்கானானை அவனது சொந்தக் களத்தில், அவனுக்கேயுரிய விளையாட்டில் தோற்கடிப்பாள் என நினைத்துக்கொண்டாள்.

அடுத்த நாள் காலையுணவின்போது, மார்க்கிடம், கராஒலொஸ் முகாம்களுக்குத் தான் போய்ப் பார்ப்பதற்கு வசதியாய் அரி பென்கானானிடம் நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்கும்படி கிற்றி கேட்டபோது, மார்க் ஆச்சரியப்படவில்லை.

"நீ அன்றிரவு எடுத்த முடிவு எனக்கு நிறைவைத் தந்தது. நீ ஏன் அதையே தொடர்ந்து கைக்கொள்ளக் கூடாது? எனக்கே இது ஏன் என்று புரியவில்லை" அவன் கூறினான்.

"பென்கானான் வென்றுவிட்டான். நீ வழிக்கு வருவாயென்று அவனுக்குத் தெரியும். முட்டாளாக இருக்காதே! நீ கராஒலொஸ் போனால் நீ இதில் ஆழ்ந்துவிடுவாய். இங்கே பார்! நானும் இதை விட்டு விடுகிறேன். நாங்கள் உடனடியாகச் சைப்பிரசை விட்டுச் சென்று விடுவோம்." தொடர்ந்து கூறினான்.

கிற்றி இல்லையெனத் தலையாட்டினாள்.

இதற்கு மார்க் "நீ உனது ஆவல் உன்னை மீற அனுமதிக்கிறாய். நீ மிகவும் புத்திசாலித்தனமாக நடப்பாயே? என்ன நடந்தது?" என்றான்.

"இப்படியான முடிவொன்று என்னிடமிருந்து வருவது விசித்திரமாயிருக்கிறது அல்லவா? என்னை ஏதோ இனம் புரியாத சக்தி உந்தித் தள்ளுவதாக உணர்கிறேன். என்னை நம்பு. இவைகள் எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு கட்டத்தான் நான் கராஒலொஸ் போகிறேன். நீ நினைப்பதுபோல் புதிதாக எதுவும் தொடங்கவல்ல." என்றாள் சிந்தனையுடன் கிற்றி.

மார்க்குக்கு அவள் மாட்டிக் கொண்டுவிட்டது புரிந்தது. அவள் மறுத்தாலும் கூட, எதிர்காலத்தில் அவளுக்கு நேரவிருப்பது எதுவாக இருந்தாலும், அவளைத் தயவோடு நடத்தட்டும் என மனப்பூர்வமாக எதிர்பார்த்தான். ❑

தொடரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

